பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 ஆடி 23 சனிக்கிழமை 08.08.2020 கதிர் 272

இனி இது ரகசியம் அல்ல!

'உரலுக்கு ஒரு பக்கம் இடி, மத்தளத்துக்கு இரண்டு பக்கமும் அடி!' - என்பார்கள்.

அந்த மாதிரி நிலைமைதான் சுமந்திரனது போலும்.

அவரின் வெற்றியை அவமானப்படுத்துவதற்கு 'பேஸ்புக்' போராளிகள் என்ன பக்கம்02 »

# தமிழ் மக்களின் பிரதிநிதிகள் ஒற்றுமைப்படுதல் அவசியம்!

## ராஜபக்ஷக்களின் சவால் மிக்க ஆட்சியை எதிர்கொள்ள அதுவே வழி என்கிறார் விக்கி

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஓக. 08

ராஜபக்ஷக்களின் சவாலான ஆட்சியை எதிர் கொள்ள நாங்கள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியுள்ளது. தமிழ் மக்களின் பிரதிநிதிகளிடையே ஒற்றுமை இருக்க வேண்டும் என்பது அவசியமானது என்பதை ஏற்றுக் கொள்கின்றேன்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் நீதியரசர் சி.வி. விக்கினேஸ்வரன் பக்கம் 02 »

## எம்.பியாகிறார் சுரேன் ராகவன்



கொழும்பு, ஓக 08

சிறிலங்கா பொதுஜன பெரமுன வின் 17 பக்கம் 02 »

## எம்முடன் இணைந்து செயற்பட வாருங்கள்

### விக்கி, கஜனுக்கு சுமந்திரன் பகிரங்க அழைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 08

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோருக்கு மக்கள் வழங்கிய ஆணையை ஏற்றுக் கொள்கின்றோம். அதேபோல், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் மக்கள் அளித்த ஆணையையும் அவர்கள் ஏற்றுக்கொண்டு, தமிழ் மக்களின் நெருக்கடியான காலகட்டத்தில் எம்முடன் ஒன்றிணைந்துசெயற்பட பக்கம் 02 »

## யாழ்ப்பாண தேர்தல் முடிவுகளில் மோசடி

### சிவாஜிலிங்கம் குற்றச்சாட்டு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஓக. 08

யாழ்ப்பாணத் தேர்தல் முடிவுகளில் மோசடி இடம்பெற்றுள்ளதாக குற்றஞ்சாட்டியுள்ள தமிழ் தேசிய கட்சியின் செயலாளர் நாயகம் எம்.கே.சிவாஜிலிங்கம், தேர்தல் பணியில் ஈடுபட்டிருந்த பக்கம் 10 »



## தேசியப்பட்டியல் ஊடாக ரணில் சபைக்கு வரார்

கொழும்பு, ஓக. 08

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, தேசியப்பட்டியல் பக்கம்02 »

## தேசியப் பட்டியலை வன்னிக்கு தாருங்கள்

### முன்னணியிடம் கோரிக்கை

வவுனியா, ஓக. 08

அகில இலங்கைதமிழ்காங்கிரஸ் கட்சிக்கு கிடைத்துள்ள தேசியபட்டியல் ஆசனத்தை வன்னி மாவட்டத்திலே போட்டியிட்டு அதிக விருப்பு வாக்குகளை பெற்ற வைத்தியர் திலகநாதனுக்கு வழங்குமாறு செட்டிகுளம் கால்நடை ஒன்றியத் தலைவர் கோரிக்கை விடுத்துள்ளார் .

இது தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர் -

கால்நடை வைத்தியரான செல்லத்தம்பி பக்கம் 02 »

## 'தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகள்' என கூட்டமைப்பினர் இனிக் கூறமுடியாது

### இப்படிச் சொல்கின்றது ராஜபக்ஷ அணி

கொழும்பு, ஓக. 08

புதிய நாடாளுமன்றத்தில் தமிழ் மக்களின் குரலாக, ஏகப்பிரதிநிதிகளாக வாதிடுவதற்கு உரிமையுள்ளது எனது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் இனிமேல் கூறமுடியாது.

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொது ஜன முன்னணியின் தவிசாளர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று மாலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது:-


கடந்த முறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 16 ஆசனங்களைப் பெற்றிருந்த நிலையில் இம்முறை 10 ஆசனங்களை மாத்திரமே பெற்றுள்ளது. தமிழ் மக்கள் இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீது மாத்திரம் நம்பிக்கை கொள்ளவில்லை.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி முதலான கட்சிகளுக்கும் தமிழ் மக்களின் நம்பிக்கை கிடைத்துள்ளது.

அத்துடன், பக்கம் 02 »

## சரியானவர்கள் வெளியேற்றப்பட்டு தவறானவர்கள் தெரிவாகியுள்ளனர்

### கூட்டமைப்பின் நிலை குறித்து விக்கி கருத்து



யாழ்ப்பாணம், ஓக. 08

விடுதலைப்புலிகளின்தலைவர் தம்பி பிரபாகரனினால் உருவாக்கப்பட்ட கூட்டமைப்பு அழிக்கப்படக்கூடாது என்றும் தவறானவர்களை நீக்கி சரியானவர்களை தெரிவு செய்து கூட்டமைப்பு சரி செய்யப்பட வேண்டும் என்றும் மேற்கொள்ளப்பட்ட பரப்புரைகள் இன்று சரியானவர்கள் வெளியேற்றப்பட்டு தவறானவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள ஒரு பாரதூரமான நிலைமையை உருவாக்கி இருக்கின்றது.

- இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியிலிருந்து நாடாளுமன்றுக்குத் தெரிவாகியுள்ள அதன் தலைவர் நீதியரசர் பக்கம் 03 »

## கத்தரியின் சூத்தை, குருவிச்சையை வெட்டி எறிந்துள்ளனர் தமிழ் மக்கள்

### சராவின் ஆலோசனையை ஏற்று நடவடிக்கை என்கிறார் சுமந்திரன்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஓக. 08

சரவணபவன் கூறிய கத்தரிக்காயின் சூத்தை மற்றும் மரத்தின் குருவிச்சை என்பவற்றை மக்கள் சரியாகவே வெட்டி அகற்றியுள்ளனர் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

நேற்றுத் தாம் யாழ்ப்பாணத்தில் நடத்திய பக்கம் 03 »

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருகுதாளம் பண்ணினார்கள் என்பதை நேற்றே இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

தமிழ் மக்கள் மத்தியில் இருந்துதான் இந்த எதிர்பார்ப்பு என்றால் தெற்கிலும் இதே நிலைமைதான்.

சுமந்திரனின் தோல்வியைக் கொண்டாடுவதற்கு மொட்டுக் கட்சித் தரப்பில் பெரும் எடுப்பில் ஏற்பாடுகள் இருந்தன என்று தெரிகின்றது.

நேற்றிரவு கொழும்புச் செய்தியாளர் ஒருவர் தொலைபேசி அழைப்பு எடுத்தார். அவரின் வாராந்த ஞாயிற்றுக்கிழமை பத்திக்கு விடயம் சேகரிக்கும் அழைப்பு அது.

*"சுமந்திரன் தோற்றுவிட்டாரா?"* – என்று கேட்டார்.

*"நான். இல்லையே. அவர் எம்.பியாகத் தெரிவு செய்யப்பட்டு விட்டார்!"* – என்றேன்.

*"அப்படியா? சுமந்திரன் தோல்வியை கொண்டாடுவதற்கு ஆளும் கட்சியினர் பெருத்த எடுப்பிலே தயாராக இருந்தனரே...!"* – என்றார் அவர்.

அவரின் பேச்சிலும் சுமந்திரன் திரும்பவும் வென்றமை ஏமாற்றமாகத்தான் இருந்தது.

*"இல்லையே... இன்றைய (நேற்றைய) 'லங்கா தீப' பத்திரிகையின் முன்பக்க இரண்டாவது 'லீட்' செய்தி சுமந்திரன் தோற்றார் என்பது தானே...!"* – என்றார் அவர்.

*"ஆம். அது தென்னிலங்கையின் விருப்பு. எதிர்பார்ப்பு. நம்பிக்கை எல்லாம். ஆனால் யதார்த்தத்தில் அவர் வென்றார். அதுதான் உண்மை."* – என்றேன் நான்.

சுமந்திரன் தோற்க வேண்டும் என்ற ஆவல் தென்னிலங்கையில் மிதமாக இருந்தது. அவருக்கு அடி – இடி – வடக்கில் மட்டுமல்ல. தெற்கிலும் கூடத்தான். பாவம் சுமந்திரன்.

* * *

பொதுத்தேர்தல் நடந்து விட்டதால் இப்போது புதிய அரசில் யார், யாருக்கு, எந்தெந்த அமைச்சுக் கிடைக்கும் என்பது தொடர்பில் பல ஹேஸ்யங்கள் கூறப்படுகின்றன.

★சமல் ராஜபக்ஷவை மீண்டும் சபாநாயகர் பதவியை ஏற்கும்படி பேசப்பட்டது. ஆனால் அவர் மறுத்து விட்டார்.

★ ஜி.எஸ்.பீரிஸுக்கு அந்தப் பதவியைக் கொடுங்கள் என்றார் சமல். ஆனால் அதற்கும் பெரும்பாலும் வாய்ப்பில்லை.

★புதிய அரசில் அரசமைப்புத் திருத்த விவகாரங்கள் முக்கிய இடம் பிடிக்கும் என்பதனால் அவரை – கலாநிதி ஜி.எல். பீரிஸை – நீதி அமைச்சர் அல்லது அரசமைப்பு விவகார அமைச்சராக நியமிக்க வாய்ப்பு அதிகம் உண்டு.

★மொட்டுக் கட்சியின் கூட்டணிக்கு வெளியில் பல கட்சிகளைச் சேர்ந்த எம்.பிக்கள் இப்போது அரசுப் பக்கத்தில் உள்ளனர். உதாரணமாக சுதந்திரக் கட்சியின், அங்கஜன், ஈ.பி.டி.பி சார்பில் அதன் தலைவர் டக்ளஸ் தேவானந்தா உட்பட இருவர், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் கட்சியின் தலைவர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) போன்ற ஒரு சிலரைச் சேர்ந்தால் மொட்டுக்கட்சி, பல கட்சிகளையும் சேர்த்து தேசிய அரசு அமைத்ததாக உரிமை கொண்டாட முடியும்.

அப்படித் தேசிய அரசு அமைத்தால், சுமார் ஐம்பது வரையான அமைச்சர்களை அந்தத் தேசிய அரசு நியமிக்க முடியும். ஆனால் தேசிய அரசு என்று எதையும் அறிவித்து உரிமை கோரும் எண்ணம் ராஜபக்ஷக்களுக்குக் கிடையாது என்றே தெரிகின்றது.

★முன்னாள் ஆளுநர்கள் பலரை மொட்டுக் கட்சி அரசு தமது தேசியப் பட்டியல் எம்.பிக்களாக நியமித்திருக்கின்றது. அந்த வகையில் நான்குக்குக் குறையாத முன்னாள் ஆளுநர்கள் இப்போது எம்.பியாகின்றனர்.

★பின்னாலில் கட்சி அரசியலில் ஈடுபடப் போகின்றவர்களை, அதற்கு முன்னர் மாகாண ஆளுநர்களாக நியமிப்பது பொறுப்பற்ற செயலாகும்.

–மின்னல்–

## தேசியப் பட்டியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடாக நாடாளுமன்றம் செல்ல மாட்டார் என தெரியவருகின்றது.

ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர்களுக்கிடையிலான விசேட கூட்டமொன்று நேற்று சிறிகொத்தவில் நடைபெற்றது. இதன்போதே ரணில் விக்கிரமசிங்க மேற்படி அறிவிப்பை விடுத்துள்ளார் என தெரியவருகின்றது.

பொதுத்தேர்தலில் படுதோல்வியடைந்த ஐக்கிய தேசியக்கட்சிக்கு தேசியப் பட்டியல் ஊடாகவே ஒரு ஆசனம் ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(முன்னர் வந்த செய்தி – 5ஆம் பக்கத்தில்)

## எம்முடன் இணைந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்வரவேண்டும் என அழைப்பு விடுக்கின்றேன்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இந்தப் பகிரங்க அழைப்பை அவர் விடுத்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது: –

நாடாளுமன்றத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 10 பேராகவே அமரப் போகின்றது. யாழ்ப்பாணத்தில் இருந்து விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் மற்றும் கஜேந்திரகுமாருடன் இன்னொருவர் நாடாளுமன்றம் வரவுள்ளனர். அவர்கள் எங்களோடு இணைந்து அல்லது நாங்கள் அவர்களோடு இணைந்து செயற்பட வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கின்றேன்.

இந்த நாடாளுமன்றத்தில் எதிர்கொள்ளவுள்ள சவால் என்பது மிக பெரியது. அதை நாம் இணைந்து எதிர்கொள்ள வேண்டும். உங்கள் மீதும் நம்பிக்கை வைத்து மக்கள் வாக்களித்துள்ளனர். உங்களுக்கு மக்கள் கொடுத்த ஜனநாயக தீர்ப்பை நாம் ஏற்றுக்கொள்வதைப் போல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு 10 ஆசனங்கள் கொடுத்துள்ள மக்களின் ஜனநாயகத் தீர்ப்பையும் நீங்கள் மதிப்பீர்கள் என நம்புகின்றேன்.

நாங்கள் இணைந்து தமிழ் மக்களுக்கு எதிராக எழுந்துள்ள இந்தப் பாரிய சவாலை முறியடிக்க – சேர்ந்து பயணிக்க எங்களுடைய கதவுகள் திறந்துள்ளன – என்றார்.

## எம்.பியாகின்றார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசியப் பட்டியல் ஆசனங்கள் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டோரின் விவரம் தேர்தல்கள் ஆணைக்குழு விடம் நேற்று கையளிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண முன்னாள் ஆளுநர் கலாநிதி

சுரேன் ராகவன், தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராகப் பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.

பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், சாகர காரியவசம், அஜித் நிவாட் கப்ரால், ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி, ஜனாதிபதி சட்டத்தரணி ஜயந்த வீரசிங்க, திருமதி மஞ்சுளா திசாநாயக்க, பேராசிரியர் ரஞ்சித் பண்டார, பேராசிரியர் சரித ஹேரத், ஜீவிந்து குமாரதுங்க, முகமட் முஸம்மில், பேராசிரியர் திஸ்ஸ விதாரண, எந்திரி யாதமினி குணவர்த்தன, கலாநிதி சுரேன் ராகவன், மருத்துவர் சீதா அரம்பேபொல, ரிரான் அலஸ், ஜயந்த கீதகொத, மார்ஜன் பளீல் ஆகியோர் நியமிக்கப் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

# இம்முறை நாடாளுமன்றில் பதினைந்து கட்சிகள்

இம்முறை நாடாளுமன்றத்துக்கு தெரிவான அரசியல் கட்சிகளின் எண்ணிக்கை 15 ஆக அதிகரித்துள்ளது.

2015 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலின் பிரகாரம் நாடாளுமன்றத்தில் 6 அரசியல் கட்சிகளே அங்கம் வகித்தன.

ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, இலங்கைத் தமிழரசுக்கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் ஈ.பி.டி.பி. ஆகியன அக்கட்சிகளாகும்.

ஆனால் இம்முறை அந்த எண்ணிக்கை 15 ஆக அதிகரித்துள்ளது. பொதுத்தேர்தலில் 15 கட்சிகள் ஆசனங்களை வென்றுள்ளன. இதில் ஐக்கிய தேசியக்கட்சி, எமது சக்தி மக்கள் கட்சி ஆகியவற்றுக்கு தலா ஒவ்வொரு தேசியப் பட்டியலே கிடைக்கப்பெற்றுள்ளன.

கட்சிகள் விவரம் வருமாறு,

1. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன.
2. தேசிய மக்கள் சக்தி
3. இலங்கை தமிழ் அரசுக்கட்சி
4. தேசிய மக்கள் சக்தி
5. அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்
6. ஈ.பி.டி.பி.
7. ஐக்கிய தேசியக் கட்சி
8. எமது சக்தி மக்கள் கட்சி
9. தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள்
10. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி
11. முஸ்லிம் தேசிய கூட்டணி
12. தமிழ் மக்கள் தேசிய கூட்டணி
13. அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்
14. தேசிய காங்கிரஸ்
15. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்.

நாடாளுமன்றத்தில் நடைபெறும் விவாதங்களின்போது மேற்படி 15 கட்சிகளுக்கும் நேரம் ஒதுக்கப்படவேண்டும். கட்சி தலைவர்கள் கூட்டத்துக்கு 15 கட்சிகளின் பிரதிநிதிகளையும் அழைக்கவேண்டும் என்பது உட்பட பல சிறப்புரிமைகள் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளுக்கு இருக்கின்றன.

## ஷானி அபேசேகரவுக்கு மீண்டும் விளக்கமறியல்

பொய் சாட்சிகளை உருவாக்கியமை தொடர்பில் கைது செய்யப்பட்ட குற்றப் புலனாய்வுத் திணைக்கள முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர மற்றும் எம்பிலிபிட்டி பொலிஸ் நிலைய உப பொலிஸ் பரிசோதகர் ஆகிய இருவரும் மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் நேற்று கம்பஹா நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

நீதிமன்றில் விசாரணையில் உள்ள வழக்கு ஒன்றிற்காக போலியான சாட்சியங்களை உருவாக்கிய குற்றச்சாட்டின் பேரில் இந்த இருவரும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## தேசியப் பட்டியலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திலகநாதனை இம்முறைதேர்தலில் வன்னி மாவட்டத்தில் களம் இறக்கியிருந்தோம். அவர் 7200 விருப்புவாக்குகளை பெற்று முன்னணியில் உள்ளார்.

அந்தவகையில் தமிழ்க் காங்கிரஸ் கட்சிக்கு தேசியப் பட்டியல் ஆசனம் ஒன்று கிடைத்துள்ளது. அந்த ஆசனத்தை வன்னிப் பகுதிக்கு ஒதுக்கி, விருப்புவாக்குகள் அதிகம் பெற்ற வைத்தியல் திலகநாதனுக்கு வழங்கவேண்டும். அவர் வன்னியில் கால்நடை தொடர்பான விடயங்களில் பல்வேறு சேவைகளை முன்னெடுத்துள்ளார்.

அந்தவகையில் அவருக்கு நாம் எமது ஆதரவினை வழங்கி அதிகமான வாக்குகளை பெற்றுக் கொடுத்துள்ளோம். எனவே அந்த ஆசனம் வன்னிப்பகுதிக்கு வழங்கவேண்டும்.

இது தொடர்பான கோரிக்கையினை முன்வைப்பதற்காக கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கு நாமும், அந்த வேட்பாளரும் அழைப்பை மேற்கொண்டிருந்தோம். தொடர்சியாக முயற்சித்தும் தொடர்பினை ஏற்படுத்த முடிய வில்லை. இதனால் ஊடகங்கள் வாயிலாக அதனை தெரியப்படுத்துகின்றோம் – என்றார்.

## 'தமிழர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த நான்கரை ஆண்டுகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐக்கிய தேசியக் கட்சியைப் பாதுகாக்கும் வகையில் சட்டம் உள்ளிட்ட அரசியல் ஆலோசனைகளை வழங்கி வந்தது.

கடந்த நல்லாட்சி அரசில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை காணப்படவில்லை. அந்தப் பெரும்பான்மைக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே ஆதரவு வழங்கியது.

இதனைவிட, 13ஆவது திருத்தம் ஊடாக மாகாண சபைக்கு 36 அதிகாரங்களைகள் வழங்கப்பட்டுள்ளன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவற்றை சரியாகப் பயன்படுத்தவில்லை – என்றார்.

## தமிழ் மக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்.நல்லூர் கோவில் வீதியில் உள்ள அவரது வீட்டில் நேற்று வெள்ளிக்கிழமை ஊடகவியலாளர்கள் சந்திப்பு நடந்தது.

இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன், அரசின் சவால் மிகுந்த ஆட்சியை எதிர் கொள்ள தமிழ் மக்களின் பிரதிநிதிகள் ஒன்றிணையவேண்டும் என்ற அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த அழைப்பு தொடர்பில் உங்கள் நிலைப்பாடு என்னவாக இருக்கும் என்று கேள்வி எழுப்பினர். இதற்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ராஜபக்ஷக்களின் சவாலான ஆட்சியை எதிர் கொள்ள நாங்கள் ஒன்றிணைந்து செயற்படவேண்டியுள்ளது.

தமிழ் மக்களின் பிரதிநிதிகளிடையே ஒற்றுமை இருக்கவேண்டும் என்பது அவசியமானது என்பதை ஏற்றுக் கொள்ளுகின்றேன். ஆனால் கடந்த காலத்தை பார்க்கும் போது சிலர் அந்த ஒன்றுமையை உடைக்கும் வண்ணமகவும், அந்த கொள்கை ரீதியான ஒற்றுமைக்கு எதிரான சிந்தனையுடனும், செயற்பாட்டுடனும் நடந்து வந்ததை நாங்கள் பார்த்திருக்கின்றோம்.

ஆகவே அரசியல் ரீதியான தந்துரோபாயமாக இவ்வாறான ஒன்றுமை தொடர்பான கருத்துக்கள் வெளியிடப்பட்டால் அதனை நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது.

முதலிலே தமிழ் மக்கள் மீது எமக்கு ஒரு பிடிப்பு இருக்க வேண்டும். இந்த மக்கள் மீது கரிசனை இருக்க வேண்டும். தமிழ் மக்களுக்காக நாங்கள் என்ன செய்யப் போகின்றோம், எப்படிச் செய்யப் போகின்றோம். அதற்கான நாங்கள் ஒருமித்து, ஒன்றித்து ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்ற அந்த எண்ணம் இயற்கையாகவே உள்ளுணர்ச்சியில் வரவேண்டும்.

ஏதோ ஒரு அரசியல் ரீதியான தந்துரோபாயமாக நாங்கள் எல்லோரும் சேர வேண்டும், நாங்கள் அப்படி செய்ய வேண்டும், இப்படி செய்ய வேண்டும் என்றெல்லாம் சொல்வதில் எந்த பயனும் இல்லை.

இதுவரை காலமும் எங்களுடைய கொள்கை ரீதியான விடயங்களை புறகணித்து, அதற்கு எதிரான கருத்துக்களை தெரிவித்தவர்கள்தான சுமந்திரன் போன்றவர்கள்.

அவர்கள் திடீரென மாறுவார்கள் என்று எங்களால் சிந்திக்க முடியாது. ஆனால் எங்களிடையே கொள்கை ரீதியான ஒன்றுமை அவசியம் என்பதை நான் ஏற்றுக் கொள்கின்றேன் – என்றார்.

# சரியானவர்கள்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

நாடாளுமன்றத்துக்கு என்னைத் தெரிவுசெய்த வாக்காளர்களுக்கு எனது உளமார்ந்த நன்றிகள். உங்கள் எதிர் பார்ப்புக்களை நிறைவேற்றும் வகையில் அர்ப்பணிப்புடன் செயற்படுவேன் என்று கூறிக்கொள்கின்றேன்.

அதேபோல, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பங்காளிக் கட்சிகள் மற்றும் அனைத்து வேட்பாளர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். கூட்டணியின் உருவாக்கம், பங்காளி கட்சிகளின் அர்ப்பணிப்பு, எமக்கிடையேயான புரிந்துணர்வு மற்றும் ஒற்றுமை ஆகியவை இல்லாமல் எனது இந்த வெற்றி சாத்தியம் ஆகியிருக்காது. நாம் தொடர்ந்து கூட்டணியாகச் செயற்படவே எண்ணியுள்ளோம்.

இந்தக் கூட்டணியை மேலும் பலப்படுத்தி தமிழ் மக்களுக்கான நேர்மையான, ஊழல் அற்ற, தமிழ் தேசியத்தின் அடிப்படையிலான அரசியல் தலைமைத்துவத்தை வழுங்குவோம்.

யாழ்ப்பாணத்தில் குறைந்தது நான்கு ஆசனங்களை நாம் எதிர்பார்த்தோம். அதேபோல, வன்னி மற்றும் கிழக்கு மாகாணங்களில் தலா குறைந்தது மூன்று ஆசனங்களை நாம் எதிர்பார்த்தோம். ஆனால் அது நடைபெறவில்லை. இதற்கான காரணங்களை நாம் ஆராய்ந்து வருகின்றோம்.

ஒரு காரணம் எம் மக்களின் ஏழ்மை யும் ஏமாற்றப்படக் கூடிய மனோநிலையுமாகும். மற்றவற்றை அடையாளம் காண்போம். ஆனால், 6 மாதங்களுக்குள் உருவாக்கப்பட்ட கூட்டணி என்ற வகை யிலும், அதனுள் கொரோனாக் காலம் உள் நுழைந்தது என்ற வகையிலும் கட்சிகள் அல்லது கூட்டணிக்குரிய மக்கள் கட்டமைப்புக்கள் உருவாக்கப்படாத நிலையிலும் நாம் பெற்றிருக்கும் வெற்றி மிகுந்த நம்பிக்கை அளிக்கின்றது.

எமது கொள்கைகள் மற்றும் அவற்றை அடைவதற்காக நாம் முன்வைத்த அணுகுமுறைகளை எமது மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். ஆணை வழங்கியிருக்கின்றார்கள்.

நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் இவற்றை அடைவதற்கு நாம் பாடுபடுவோம்.

தேர்தல் பரப்புரையின்போது, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மீது நான் முன்வைத்த அதே குற்றச்சாட்டை நான் மீண்டும் நினைவுபடுத்த வேண்டியுள்ளது. நீங்கள் கடந்த காலத்தில் உரிமை அரசியலை தவிர்த்து சலுகை அரசியலை முதன்மைப்படுத்தி மேற்கொண்ட செயற்பாடுகளே இம்முறை தேர்தலில் கணிசமானளவு மக்கள் சிங்கள கட்சிகளுக்கும் அரச சார்பு தமிழ்க் கட்சிகளுக்கும் வாக்களிக்கும் நிலைமையை உருவாக்கியிருக்கின்றது. இதே தவறை மீண்டும் செய்து எமது 70 வருட கால போராட்டத்துக்கு சாவு மணி அடித்துவிடாதீர்கள்.

வடக்கு! கிழக்கு ரீதியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெரும் தோல்வியை சந்தித்துள்ளது. விடுதலைப் புலிகளின் தலைவர் தம்பி பிரபாகரனினால் உருவாக்கப்பட்ட கூட்டமைப்பு அழிக்கப்படக்கூடாது என்றும் தவறானவர்களை நீக்கி சரியான வர்களைத் தெரிவு செய்து கூட்டமைப்பு சரிசெய்யப் படவேண்டும் என்றும் மேற்கொள்ளப் பட்ட பரப்புரைகள் இன்று சரியானவர்கள் வெளியேற் றப்பட்டு தவறானவர்கள் தெரிவு செய் யப்பட்டுள்ள ஒரு பாரதூரமான நிலை மையை உருவாக்கி இருக்கின்றது.

தேர்தல் முடிவடைந்த பின்னர், ஆசனங்களுக்காக இடம்பெற்றுள்ள சில அசிங்கமான செயற்பாடுகள் கூட்டமைப்பின் எதிர்காலப் பாதையை கட்டியம் கூறி நிற்கின்றன.

எது எவ்வாறாக இருந்தபோதிலும், தெரிவு செய்யப்பட்டுள்ள எல்லா தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும், இந்த நாட்டில் எமது மக்களின் இருப்பு, அடையாளம் ஆகியவற்றை அழிவில் இருந்து மீட்கும் வகையில் மிகவும் அவதானத்துடனும் பொறுப்புணர்வுடனும் செயற்படவேண்டிய ஒரு ஆபத்தான சூழ்நிலையில் இருக்கின்றோம்.


முன்னெப்போதும் இல்லாத வகையில், சிங்கள பௌத்த பேரினவாதம் நாடாளுமன்றத்துக்குள் அசுர பலத்துடன் புகுந்துள்ளது. பெருமளவில் எமது பூர்வீக நிலங்கள் அபகரிக்கப்படும் ஆபத்தும் கட்டமைப்பு மற்றும் கலாசார ரீதியான இனப்படு கொலைகளும் தீவிரப்படுத்தப்படும் ஆபத்தும் ஏற்பட்டுள்ளன. இந்த அச்சுறுத்தலை தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் ஒன்று சேர்ந்து முறியடிக்கவேண்டும்.

எமக்கு இடையேயான பொது உபாயங்கள் அவசியம். ஒன்றுபட்ட செயற்பாடுகள் அவசியம்.

எமது மக்கள் ஒன்றை புரிந்து கொள்ளவேண்டும். பௌத்த சிங்கள பேரினவாதத்தின் எழுச்சியும் திரட்சியும், நாம் அவர்களுக்கு அஞ்சி ஒடுங்கி எமது சுய நிர்ணய உரிமைகளைப் பேசக்கூடாது என்றோ விட்டுக்கொடுக்க வேண்டும் என்றோ ஆகிவிடக் கூடாது.

சர்வதேச ரீதியான சுயாதீன விசாரணைகளை நாம் வலியுறுத்தமுடியாது என்று ஆகிவிடக் கூடாது. நில ஆக்கிரமிப்புக்களுக்கு எதிராகவோ அல்லது காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதிக்காகவோ நாம் போராட முடியாது என்று ஆகிவிடக் கூடாது. வடக்கு!கிழக்கு இணைப்பை நாம் வலியுறுத்தக் கூடாது என்று கூட ஆகிவிடக்கூடாது.

எமது இனத்தின் நன்மை கருதி தெரிவுசெய்யப்பட்டுள்ள எமது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையே சிங்கள பௌத்த பேரினவாதத்தை எதிர்கொள்வதற்கு கொள்கை அடிப்படையில் ஒன்றுபட்ட ஒருங்கிணைந்த செயற்பாடுகள் மிகவும் அவசியமாக இருக்கின்றது. இதற்கு நானும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியும் தயாராக இருக்கின்றோம்!என்றுள்ளது.







# கத்தரியின் சூத்தை,....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியாளர் மாநாட் டிலேயே அவர் இதனைக் கூறினார். இது தொடர் பில் அவர் அங்கு கூறியவை வருமாறு:-

நாடாளுமன்றத் தேர்தல் காலத்தில் எமது சக வேட்பாளர் சரவணபவன் இரண்டு தடவைகள் நமது மக்களிற்கு ஆலோசனை கூறினார். அந்த இரு ஆலோசனை யையும் ஏற்று எமது மக்கள் சரியாகவே நடந்திருக்கின்றனர்.

கத்தரிக்காய் ஒரு பகுதி சூத்தை என்றால் கத்தரிக்காயை நிராகரிப்பதில்லை. சூத்தையை வெட்டி எறிவார்கள். மரத்தில் குருவிச்சை என்பதற்காக மரத்தை வெட்டுவதில்லை. குருவிச்சையைத்தான் வெட்ட வேண்டும் என்று சரவணபவன் கூறியிருந்தார்.

குருவிச்சை வெட்டப்பட்டிருக்கின் றது. கத்தரிக்காயை வைத்துக் கொண்டு சூத்தையினை வெட்டி எறிந்துள்ளனர். இதற்கு விசேடமாக நன்றியினைத் தெரிவிக்க வேண்டும். - என்றார் சுமந்திரன்.



காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# கலந்தாலோசனை நடத்தி ஒன்றுபட்டுச் செயற்படுங்கள்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் இலங்கைத் தமிழரசின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் தமது தேர்தல் வெற்றியை அடுத்து நேற்று யாழ்ப்பாணத்தில் தாம் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்த கருத்துகள் முக்கிய மானவை.

கூட்டமைப்புடன் இணைந்து செயற்பட முன்வருமாறு நீதியரசர் விக்னேஸ்வரனின் கட்சிக்கும், கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தில் கட்சிக்கும் அவர் அழைப்பு விடுத்திருக்கின்றார்.

*"தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வீ.விக்னேஸ்வரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோருக்கு மக்கள் வழங்கிய ஆணையை ஏற்றுக் கொள்கின்றோம். அதேபோல், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் மக்கள் அளித்த ஆணையையும் அவர்கள் ஏற்றுக் கொண்டு, தமிழ் மக்களின் நெருக்கடியான காலகட்டத்தில் எம்முடன் ஒன்றிணைந்து செயற்பட முன்வர வேண்டும் என அழைப்பு விடுக்கிறேன்."* – இவ்வாறு சுமந்திரன் அந்தக் பத்திரிகையாளர் மாநாட்டில் வைத்துப் பகிரங்க அழைப்பு விடுத்திருக்கின்றார்.

அந்த அழைப்பு விடுக்கப்பட்ட அதே சமயத்தில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும், யாழ்.மாவட்டத்தின் புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவருமான நீதியரசர் விக்னேஸ்வரனின் பக்கத்திலிருந்தும் ஓர் அறிக்கை வெளியானது.

அதில் *"தெரிவு செய்யப்பட்டுள்ள எமது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையே, எமது இனத்தின் நன்மை கருதி, சிங்கள, பௌத்த பேரினவாதத்தை எதிர்கொள்வதற்கு, கொள்கை அடிப்படையில் ஒன்றுபட்ட – ஒருங்கிணைந்த – செயற்பாடுகள் மிகவும் அவசியமாக இருக்கின்றன. இதற்கு நானும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியும் தயாராக இருக்கின்றோம்."* – என்று அவர் அறிவித்திருக்கின்றார்.

நீதியரசர் விக்னேஸ்வரனின் அறிவிப்பில் – அறிக்கையில் – உள்ள ஒரு வாசகம் முக்கியமானது.

*".....கொள்கை அடிப்படையில் – ஒன்றுபட்ட – ஒருங்கிணைந்த – செயற்பாடுகள் மிகவும் அவசியமாக இருக்கின்றன"* – என்ற வாசகமே முக்கியத்துவம் பொறுகின்றது.

இந்தக் கொள்கை ரீதியான அடிப்படையில் இணக்கப்பாடுகள் வருவதற்கு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் பின் நிற்கப் போவதில்லை என்பது உறுதி.

நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள – தமிழ்த் தேசியத்தை வலியுறுத்தும் தரப்புகளாகத் தங்களைக் கூறிக் கொள்கின்ற – அணிகள் கொள்கை ரீதியாக ஒன்றிணைவது என்பது காலத்தில் கட்டாயமாகும்.

தென்னிலங்கையில் பௌத்த, சிங்களப் பேரினவாதம் முன்னெப்போதும் இல்லாத வகையில் வீறு கொண்டு எழுச்சி பெற்றிருக்கின்றது.

அதே விஸ்வரூப எழுச்சியோடு ஆட்சி, அதிகாரத்தைக் கைப்பற்றியிருக்கும் அப்பேரினவாதம், அந்த அதிகாரங்கள் மூலம் பேரினவாத பௌத்த, சிங்களத்தை மட்டும் இந்த இலங்கைத் தீவில் நிலைநிறுத்தவும், ஏனைய மதங்கள், மொழிகள், இனங்களை ஒடுக்கி, ஒழித்துக் கட்டவும் கங்கணம் கட்டி நிற்கின்றது.

தம் இருப்பையும், கௌரவ வாழ்வையும், உரிமைகளையும் நிலைநிறுத்த வேண்டிய கட்டாயத்தில் சிக்குண்டு நிற்கும் தமிழ்த் தேசியம் போன்ற சிறுபான்மைத் தரப்புகளுக்கு இந்தப் பேரினவாதத்தை எதிர்கொள்வது ஒரு பெரும் சவாலாகும்.

பேரினவாதத்தின் வீறு கொண்ட எழுச்சிக்கு முகம் கொடுத்து, இத்தகைய சவால்களை எதிர்கொள்வதற்கு சிறுபான்மைத் தரப்புகள் தமக்குள் ஒன்றுபட்டு நிற்பது காலத்தில் கட்டாயம் – வரலாற்றின் நியதி – ஆகும்.

தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு *'ஒன்றுபட்ட தமிழர் தாயகத்தில் சமஷ்டி ஆட்சி முறைமை'* என்ற கோட்பாட்டில் இந்த முத்தரப்புகளும் ஒன்றுபடலாம் என்றாலும் கூட, அந்த இலக்கை அடைவதற்கான வழி முறைகள் குறித்த பாதை அல்லது மார்க்கம் தொடர்பில் – பின்பற்ற வேண்டிய செல்நெறி சம்பந்தமாக – அத்தரப்புகள் இடையே முரண்பாடான கருத்து நிலைப்பாடுகள் உள்ளன.

அவற்றைக் களைந்து, ஒற்றுமைப்பட்ட நிலைப்பாட்டுக்கு அவர்கள் வந்தால்தான், இணக்க நிலை சாத்தியமாகும். அதை எட்டுவதற்கு நீண்ட நாள்கள் மனந்திறந்து இந்த முத்தரப்புகளும் வெளிப்படையான கலந்தாலோசனை நடத்துவது அவசியமாகும்.

# திருகோணமலையில் சம்பந்தனுக்கு 21 ஆயிரத்து 422 விருப்பு வாக்குகள்






திருகோணமலை மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ள அதன் தலைவர் இரா.சம்பந்தன் 21 ஆயிரத்து 422 விருப்பு வாக்குகளைப் பெற்று நான்காம் இடத்தில் உள்ளார்.

அதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் தெரிவான எஸ்.எம் தௌபீக் 43 ஆயிரத்து 759 வாக்குகளைப் பெற்று முதலாம் இடத்திலும், இம்ரான் மஹ்ரூப் 39 ஆயிரத்து 29 வாக்குகளைப் பெற்று இரண்டாம் இடத்திலும் உள்ளனர்.

ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணி சார்பில் தெரிவான கபில நுவன் அத்துகோரல 30 ஆயிரத்து 56 வாக்குகளைப் பெற்று மூன்றாம் இடத்திலும் உள்ளார்.

# வன்னியில் ரிஷாத்துக்கு அதிக விருப்பு வாக்குகள்

## சார்ள்ஸ் இரண்டாம் இடம்








வன்னி,ஒக.08

வன்னி மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்டு நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ள அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியுதீன் அதிக விருப்பு வாக்குகளைப் பெற்றுள்ளார். அவருக்கு 28 ஆயிரத்து 203 வாக்குகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் சார்பில் தெரிவான சார்ள்ஸ் நிர்மலநாதன் 25 ஆயிரத்து 668 வாக்குகளைப் பெற்று இரண்டாம் இடத்தில் உள்ளார்.

கூட்டமைப்பின்சார்பில்தெரிவானஏனைய உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன் 18 ஆயிரத்து 563 வாக்குகளையும், எஸ்.வினோநோகராதலிங்கம் 15 ஆயிரத்து 190 வாக்குகளையும் பெற்றுள்ளனர்.

ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணி சார்பில் தெரிவான காதர் மஸ்தான் 13 ஆயிரத்து 454 வாக்குகளையும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி சார்பில் தெரிவான குலசிங்கம் திலீபன் 3 ஆயிரத்து 203 வாக்குகளையும் பெற்றுள்ளனர்.

# கிண்ணியாவில் ஒருவர் வெட்டிக் கொலை

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை, ஒக. 08

திருகோணமலை, கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பூவரசன் தீவுப் பகுதியில் ஒருவர் வாளால் வெட்டிக் கொலை செய்யப்பட்டார். இந்தச் சம்பவம் தொடர்பில் இரண்டு சந்தேக நபர்களைத் தாங்கள் கைது செய்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் பகல் 11 30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு வெட்டி கொலை செய்யப்பட்டவர் கிண்ணியா பூவரசன்தீவு பகுதியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான அப்துல்மனாப் முஹம்மத்சப்பான் (25வயது) எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பாடசாலையொன்றில் திருட்டு சம்பவத்தில் ஈடுபட்ட ஒருவரை இவர் காட்டிக் கொடுத்தமையால் ஏற்பட்ட கோபம் காரணமாகவே அவரை நேற்றிரவு வாளால் வெட்டிக் காயப்படுத்தியுள்ளனர். இதனையடுத்து கிண்ணியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர் அங்கு உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வெட்டிக் கொலை செய்யப்பட்டமை தொடர்பில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு நபர்களைத் தாங்கள் தற் பொழுது கைது செய்துள்ளனர் எனவும், புலன் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர் எனவும் கிண்ணியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் தற்பொழுது திருகோணமலை பொது வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ள நிலையில் பிரேத பரிசோதனையை திருகோணமலை பொது வைத்தியசாலையின் சட்ட வைத்திய நிபுணர் மலிந்த டி சில்வா மேற் கொண்டார்.

கொலை செய்யப்பட்ட நபரின் சடலத்தை அவரது உறவினர்களிடம் ஒப்படைக்க உள்ளனர் எனவும் கிண்ணியாப் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு - மின்னஞ்சல் - kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் - 076 443 8622

# விருப்பு வாக்குகளில் மஹிந்தர் சாதனை!

## 5,27,364 பெற்றார்



குருநாகல் மாவட்டத்தில் போட்டியிட்ட பொதுஜன பெரமுனவின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ விருப்பு வாக்குக ளில் முன்னிலையில் உள்ளார்.

இவர் 5,27,364 அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்று சாதனை படைத் துள்ளார்.

அதாவது கடந்த 2015 தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட ரணில் விக்ரமசிங்க 5,00,566 வாக்குக ளைப் பெற்றிருந்தார்.

அந்த சாதனையை தற்போது பொது ஜன பெரமுனவின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ முறியடித்துள்ளார்.

நடைபெற்று முடிந்துள்ள பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெர முன 145 ஆசனங்களைப் பெற்று அமோக வெற்றியைப் பதிவுசெய்துள் ளது.

அக்கட்சி, 68 இலட்சத்து, 53ஆயி ரத்து 693 வாக்குக ளைப் பெற்றுள்ள துடன் செல்லுபடியான மொத்த வாக்குக ளில் 59.09 வீத வாக்குகளைப் பெற் றுள்ளது.

அதாவது மூன்றில் இரண்டு பெரும் பான்மைக்கு இன்னும் 5ஆசனங்களே குறித்த கட்சிக்கு தேவைப்படுகின்றது. எனவே அதனை தனக்கு ஆதரவான கட்சிகளுடன் இணைந்து 3/2பெரும் பான்மையை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு அதிகம் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஐக்கிய தேசிய கட்சியின் எம்.பி. ஆசனம் ரணிலுக்கு?



ஐக்கிய தேசிய கட்சிக்கு கிடைத்துள்ள ஒரே ஒரு தேசிய பட்டியல் உறுப்பினர் பதவிக்காக அந்த கட்சி யின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவை பெயரிட வுள்ளனர் எனத் தெரிவிக்கப்படு கிறது.

ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் போட்டியிட்ட எந்தவொரு உறுப்பினரும் வெற்றி பெறவில்லை. எனினும் பெற்றுக்கொண்ட வாக்கின் அடிப்படை யில் ஒரு தேசியப்பட்டியல் உறுப்பினர் அக்கட்சிக்கு வழங் கப்பட்டுள்ளது.

அந்தப் பதவிக்காகக் கட்சிக்குள் உள்ளக மோதல் ஏற்படுவதனைத் தடுப்பதற்காக கட்சியின் தலைவ ருக்கு அந்தப் பதவியை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள் ளதாக தெரிய வருகிறது.

பொதுத் தேர்தலில் ஏற்பட்டுள்ள பாரிய தோல்விக் கான காரணத்தை கண்டறிவதற்கு கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்கவினால் 5 பேர் கொண்ட குழு வொன்று நியமிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படு கின்றது.

ஐக்கிய தேசிய கட்சிக்குள் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக, சஜித் தலைமையிலான பெரும் எண் ணிக்கை உறுப்பினர்கள் வெளியேறியிருந்தனர். இதன் காரணமாக சஜித் தலைமையில் ஐக்கிய மக் கள் சக்தி என்ற புதிய கட்சியின் கீழ் அவர்கள் தேர்த லில் போட்டியிட்டு, 55 ஆசனங்களை வெற்றி பெற் றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க் 1977 ஆம் ஆண்டு முதல் - கடந்த 43 ஆண்டுகளாக - நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பொலன்னறுவையில் மைத்திரி முன்னிலை

கொழும்பு, ஒக. 08

பொலன்னறுவைமாவட் டத்தில் முன்னாள் ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேன அதிக விருப்பு வாக்குகளை பெற்றுள்ளார்.


அந்தத் தேர்தலில் 111,137 வாக்குகளை மைத்திரிபால சிறி சேன மொத்தமாக பெற் றுள்ளார்.

மேலும் பொலன்னறு வைமாவட்டத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 180, 847 வாக்குகளையும் ஐக் கிய மக்கள் சக்தி 47,781 வாக்குகளையும் தேசிய மக் கள் சக்தி 6,792 வாக்குக ளையும் ஐக்கிய தேசியக் கட்சி 6,525 வாக்குகளை யும் பெற்றுள்ளன.

அந்தவகையில் பொது ஜன பெரமுன கட்சிக்கு 4 ஆசனங்களும் ஐக்கிய மக் கள் சக்திக்கு 1 ஆசனமும் கிடைத்துள்ளமை குறிப்பி டத்தக்கது.

# ஹிருணிகா, பௌசி கொழும்பில் தோல்வி

## சுஜீவவும் 'அவுட்'







நடந்து முடிந்த நாடா ளுமன்றத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் பட்டியலில் போட்டி யிட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹிரு ணிக்கா பிரேமச்சந்திர, சுஜீவ சேனசிங்க, ஏ.எச். எம். பௌசி ஆகியோர் தோல்வியடைந்துள்ள னர்.

அத்துடன், தமிழ் வேட் பாளர்களான வி.ஜனகன், சி.வை.பி.ராம் ஆகியோரும் நாடாளுமன்றம் தெரிவாக வில்லை.

அதேவேளை, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி சார்பில் போட்டியிட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பி னர் திலங்க சுமதிபாலவும் தோல்வியடைந்துள்ளார்.

# ஐ.தே.க. பிரபலங்கள் பதவி விலகத் தயார்!

ஐக்கிய தேசிய கட் சியின் பிரபலங்கள் பலர் தங்கள் பதவிகளில் இருந்து இரா ஜினாமாச் செய்யத் தயாராகி வருகின்றனர் எனத் தகவல் வெளியாகி யுள்ளது.

ஐக்கிய தேசிய கட் சிக்குப் பாரிய தோல்வியை பெற்றுக் கொடுக்கும் தேர்தல் முடிவுகள் வெளி யாகியபோதே பிரப லங்க ளுக்கு இடையில் அவசர கலந்துரையாடல் இடம் பெற்றுள்ளது.

பொதுத் தேர்தலில் ஐக் கிய தேசிய கட்சி வரலாற் றுத் தோல்வியை சந்தித் துள்ள நிலையில் ஒரே ஓர் ஆசனத்தை மாத்திரம் கைப் பற்றியது.

ஐக்கிய தேசிய கட்சி யைப் பின்தள்ளி தமிழ் தேசிய கூட் டமைப்பு மற் றும் மக்கள் விடு தலை முன்னணி, தமிழ்க் காங் கிரஸ் போன்றவை முன் னிலையில் உள்ளன.

இலங்கையில்பாரம்பரிய கட்சியான ஐக்கிய தேசிய கட்சி படுமோசமான தோல் வியை தழுவிய முதல் சந் தர்ப்பம் இதுவாகும். கட்சி யின் தலைவர் ரணில் விக்கி ரமசிங்கவும்தமதுகொழும்பு மாவட்டத்தில் தோல்வி அடைந்துள்ளமை குறிப்பி டத்தக்கது.

# மாவையைச் சந்தித்து முறையிட்டார் சசிகலா

(பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணம், ஒக. 08

இலங்கை தமிழரசுக் கட்சி யின் தலைவர் மாவை சேனா திராஜாவை அவரது இல்லத்தில் சசிகலா ரவிராஜ் சந்தித்துக் கலந் துரையாடினார்.

மாவிட்டபுரத்தில் அமைந் துள்ள மாவை சேனாதிராஜா வின் இல்லத்திற்கு நேற்றுக் காலை 6 மணியவில் சென்று சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது நேற்றைய தேர் தல் முடிவுகள் தொடர்பாகவும் வாக்கெண்ணும் நிலையத்தில் காணப்பட்ட கள நிலைமைகள் தொடர்பாகவும் பேசப்பட்டது.

நேற்றைய தினம் மத்திய வாக் கெண்ணும் நிலையத்திலிருந்து சசிகலா இடைநடுவில் அழுத வாறு வெளியேறியமை குறிப் பிடத்தக்கது.

# கண்டியில் ஹக்கீம், வேலுகுமாருடன் அப்துல் ஹலீமும் வெற்றியடைந்தார்!







கண்டி, ஒக.08

கண்டிமாவட்டத்தில்ஒருதமிழ ரும், இரு முஸ்லிம்களும் நாடா ளுமன்றத்துக்குத் தெரிவாகி யுள்ளனர்.


ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்ட முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர்களான எம். வேலு குமார் (57,445), ரவூப் ஹக்கீம் (83,398) மற்றும் அப்துல் ஹலீம் (71,063) ஆகியோரே இம் முறையும் வெற்றி பெற்றுள் ளனர்.

கண்டியில் ஐக்கிய மக்கள் சக்திக்கு 4 ஆசனங்களும், ஸ்ரீலங்கா பொதுஜன முன்ன ணிக்கு 8 ஆசனங்களும் கிடைக் கப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக் கது.

ஸ்ரீலங்கா பொதுஜன முன் னணி சார்பில் போட்டியிட்ட தமி ழர்கள், முஸ்லிம்களில் எவரும் வெற்றி பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# மலையகத்தில் கடும் மழை

(தலவாக்கலை நிருபர்)



மலையகத்தில் கடும் மழை காரண மாக மேல் கொத்மலை நீர்த்தேக்கத் தில் மூன்று வான்கதவுகள் திறக்கப்பட் டுள்ளன.

இதனால் கொத்மலை ஆற்றின் நீர் மட்டம் உயர்ந்துள்ளது. எனவே நீர்த்தே கத்திற்கு கீழ் தாழ் நிலப் பகுதியில் வாழும் மக்கள் அவதானமாக இருக்குமாறு இடர் முகாமைத்துவ மத்திய நிலைய பொது மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir

# மிகவும் பொறுப்பில்லாமல் செயற்பட்டதனாலே மக்களால் சரவணபவன் தோற்கடிக்கப்பட்டார்!

## சுமந்திரன் பகிரங்கமாகத் தெரிவிப்பு



- எஸ். நிதர்ஷன் -

பத்து வருடம் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த சரவணபவன் மிக மிக பொறுப்பில்லாமல் செயற்பட்டதனாலே தோற்றார். அவர் கட்டாயம் தோற்கடிக்கப்பட வேண்டியவர். மக்களும் அவருடைய செயற்பாடுகள் தெரிந்து அவரைத் தோற்கடித் தார்கள்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுத் தாம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இந்தப் பகிரங்கக் கருத்தை அவர் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

### 'மொட்டு' பக்கம் அலை

முக்கியமான தேர்தல் நாட்டில் நடைபெற்று முடிந்திருக்கின்றது. இந்தத் தேர்தலிலே பாரிய மாற்றங்கள் நாடு முழுவதுமாக நிகழ்ந்திருக்கின்றது. ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி மூன்றில் இரண்டு பெரும்பான்மை கேட்டு இந்தத் தேர்தலிலே போட்டியிட்டார்கள். ஐக்கிய தேசியக் கட்சி இரண்டாகப் பிளவடைந்து இரண்டு அணியாகத் தேர்தலிலே போட்டியிட்டது.

ஸ்ரீலங்கா பொதுஜன முண்ணனி மக்களிடத்தே கேட்டதைப் போலவே அவர்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றிருக்கிறார்கள். கட்சியாக அதைப் பெறாவிட்டாலும் அவர்களுடைய அணியைச் சார்ந்தவர்கள் மூலமாக அந்த எண்ணிக்கையை அவர்கள் அடைகின்றார்கள்.

இதுவொரு மிக முக்கியமான விடயம். இது குறித்து நாங்கள் வருகின்ற நாட்களில் சில தீர்மானங்களை எடுக்க வேண்டும். மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவர்கள் கேட்டிருந்தாலும் அவர்களுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்கும் என்று எவரும் நினைத்திருக்கவில்லை.

ஆகவே, பலத்த ஓர் அலை அவர்கள் பக்கமாக வீசியிருக்கின்றது. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாகவே உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஆரம்பித்த அந்த அலை அதிகரித்து அதிகரித்து ஜனாதிபதித் தேர்தல் நாடாளுமன்றத் தேர்தல் என அதிகரித்த அலை அவர்கள் பக்கம் வீசியிருக்கின்றது.

### பெரும்பான்மையை வைத்து '19' திருத்தத்தை நீக்குவார்களா?

குறிப்பாக அரசமைப்புச் சீர்திருத்தம் சம்பந்தமாக அவர்கள் பல விடயங்களை ஏற்கனவே சொல்லியிருக்கிறார்கள். 19ஆவது திருத்தம் சம்பந்தமாகவும் சுயாதீன ஆணைக்குழுக்கள் சம்பந்தமாகவும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையிலே கொண்டுவரப்பட்ட மட்டுப்படுத்தல்கள் சம்பந்தமாகவும் தாங்கள் செய்யப் போவதாகப் பலவிதமான விடயங்களை அவர்கள் ஏற்கனவே நாட்டுக்குச் சொல்லியிருக்கின்றார்கள்.

ஆகையினாலே வருகின்ற நாடாளுமன்றத்திலே அவர்கள் சொன்னபடி அந்த நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்பதைப் பொறுத்திருந்து பார்க்க வேண்டும். ஜனநாயகத்தை நோக்கியதான பல சீர்திருத்தங்கள் 19ஆவது திருத்தத்திலே செய்யப்பட்டிருந்தன. அதை நாடாளுமன்றம் நிறைவேற்றுகின்றபோது ஓர் உறுப்பினரைத் தவிர மற்ற அனைத்து உறுப்பினர்களும் அதற்குச் சாதகமாக வாக்களித்திருந்தார்கள் என்பதை நாங்கள் மறக்க முடியாது.

அது 2015 இலே நடந்தது. ஆனால், 5 வருடம் கழித்து 2020 இலே மக்கள் இந்த அரசுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கொடுத்திருக்கின்றார்கள். அதை ஆணையாக வைத்து அந்த ஜனநாயக சீர்திருத்தங்களை அவர்கள் இல்லாமல் பண்ணுவார்களா என்பதுதான் நாட்டிலே இன்றைக்கு இருக்கின்ற பெரியதொரு கேள்வியாகும்.

### 13 அவது திருத்தத்திலும் கை வைக்கும் அரசு

அத்தோடு 13 ஆவது திருத்தத்தைப் பற்றியும் அவர்களிலே சிலர் அடிக்கடி சொல்லி வந்திருக்கின்றார்கள். ஆனால், 13 ஆவது திருத்தத்தைப் பொறுத்தவரையில் 2010ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ அரசு பதவியில் இருந்தபோது மூன்றில் இரண்டு பெரும்பான்மையை எய்தினார்கள். அந்தவேளையிலும் கூட 13ஆவது திருத்தத்தில் இருந்து நான்கு அதிகாரங்களை விலக்குவதற்காக அவர்கள் நடவடிக்கை எடுத்திருந்தபோதும் கூட அது சம்பந்தமாக ஓர் அமைச்சரவைத் தீர்மானம் எடுத்திருந்தபோதும் அது செய்ய முடியாமல் போனது.

அதற்குக் காரணம் என்னவெனில் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையிலே அவர்கள் செயற்பட வேண்டும் என்பது இந்தியாவினுடைய எதிர்பார்ப்பாக இருந்தது. இந்திய அரசு அந்த வேளையிலே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவோடு தொடர்பு கொண்டதன் நிமிர்த்தம் அது கைவிடப்பட்டது.

நாங்களும் அது சம்பந்தமான விடயத்தில் முக்கிய பணியை ஆற்றியிருந்தோம். இந்தியாவுக்குச் சென்று பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்து விடயங்களை நாங்கள் விளக்கிச் சொன்ன பிறகுதான் அந்த விடயங்கள் குறித்தான நடவடிக்கை நிறுத்தப்பட்டது. ஆகவே, திரும்பவும் 13ஆவது திருத்தத்தைச் சீர்செய்வது அல்லது மாற்றியமைப்பது சம்பந்தமாக அவர்கள் முயற்சி எடுக்கலாம். அதைக் குறித்து நாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம்.

ஆனால், 13ஆவது திருத்தம் எங்களது பிரச்சினைக்கு முழுமையான தீர்வல்ல என்பதில் நாங்கள் தொடர்ச்சியாக உறுதியாகவே இருந்து வருகின்றோம். ஆனால், அதிலே செய்யப்பட்ட சில முன்னெடுப்புக்கள் விசேடமாக மாகாணத்தை அலகாக வைத்து அதிகாரப் பகிர்வு செய்யப்பட்டதும் மாகாணங்கள் இணையக் கூடிய வகையிலே அங்கே இடமிருக்கின்றதும் மிக முக்கியமான விடயங்கள்.

### வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும்

ஆகையினாலே 13 ஆவது திருத்தத்துக்கும் அப்பாலே சென்று அதிகாரப் பகிர்வை அர்த்தமுள்ளதாக்குவேன் என்று மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவுக்கு மூன்று தடவைகள் எழுத்திலே வாக்குறுதி கொடுத்திருக்கின்றார். அதாவது ஒரு கூட்டறிக்கை மூலமாக 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தி அதற்கு அப்பாலும் சென்று அதிகாரப் பகிர்வை அர்த்தமுள்ளதாக்குவேன் என்று அவர் வாக்குறுதி கொடுத்திருந்தார். ஆகையினால் அதே அரசு அதே கட்சி வேறு பெயரில் ஆட்சியில் இருந்தாலும் அதை அவர்கள் மீறுவதற்கு முயற்சி எடுக்கமாட்டார்கள் என்பதற்கப்பால் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றவும் வேண்டும். அதை நாங்கள் வலிமையாக வலியுறுத்துவோம்.

தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு முழுமையான தீர்வு வழங்கப்படும் என்று போரை முடிவுக்குக்கொண்டுவர உதவிய பல நாடுகளுக்கு வாக்குறுதி அரசால் வாக்குறுதி வழங்கப்பட்டிருந்தது. இந்தநிலையில், போர் நிறைவடைந்து 10 வருடங்கள் கழிந்தும் இன்னமும் அதைச் செய்யாமல் அரசு இருக்கின்றது . இது சர்வதேசத்துக்குக் கொடுத்த வாக்குறுதிகளை மீறுகின்ற செயல். ஆகையினாலே இந்த அரசின் காலத்திலே அதை அவர்களைச் செய்ய வைப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுக்குமென்பதை சொல்லி வைக்க விரும்புகிறேன்.

### தேர்தலில் எதிர்பாராத பின்னடைவு

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாரிய பின்னடைவைச் சந்தித்துள்ளது. வடக்கு, கிழக்கில் 20 ஆசனங்களை வழங்க வேண்டுமென நாங்கள் மக்களிடம் கேட்டோம். இப்போது அதில் அரைவாசி எண்ணிக்கைதான் எங்களுக்குக் கிடைத்துள்ளது. அதாவது 10 ஆசனாங்கள். இது மிக சொற்பம்.

இது நாங்கள் எதிர்பாராத ஒரு பின்னடைவு. கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் எங்களுக்கு இப்படியான பின்னடைவு இருந்த போதிலும், அந்தத் தேர்தல் முறைமை ரீதியாக - சூழல் வித்தியாசம் காரணமாக அந்தப் பின்னடைவிலிருந்து மீண்டெழுவோம் என்ற நம்பிக்கையுடன் இந்தத் தேர்தலுக்கு முகம் கொடுத்தோம்.

### மக்கள் தீர்ப்பை ஏற்கின்றோம்

இந்தத் தேர்தலில் தமிழ் மக்கள் வாக்களித்துள்ள முறை பல கரிசனைகளை எழுப்புகின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலே நம்பிக்கை குறைந்துள்ளது என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். அந்த மக்கள் தீர்ப்பை நாம் பொறுப்புணர்வுடன் ஏற்றுக்கொள்வதுடன், அந்த நம்பிக்கையை மீளக்கட்டியெழுப்பும் செயற்பாட்டில் உடனடியாக நாங்கள் இறங்குவோம்.

மக்களுடன், அடிமட்ட தொண்டர்களுடனான கலந்துரையாடல்கள், எங்களுக்குள் மேற்கொள்ளும் கலந்துரையாடல்கள் மூலம் பொதுத்தேர்தல் பின்னடைவுக்கான காரணத்தைக் கண்டறிந்து, உடனடியாகக் கட்சியை மறுசீரமைத்து மக்கள் மயப்படுத்தி, திரும்பவும் மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெறும் கட்சியாக மாற்றுவதற்கான நடவடிக்கையை எடுப்போம்.

எங்களுக்கு வாக்களிக்காத மக்கள் வழக்கம் போல் இரண்டு பக்கமும் போயிருக்கிறார்கள் என்றால் அது சரியாக அமையாது. கடும் தமிழ்த் தேசியம் பேசுபவர்கள் பக்கமாக சிலர் இருக்கிறார்கள். அவர்களைப் போலித் தமிழ்த் தேசியவாதிகள் என நாங்கள் வர்ணிப்பதுண்டு. ஆனால், அவர்களுக்கும் ஒவ்வொரு ஆசனங்கள் கிடைத்துள்ளன.

ஆனால், வடக்கு, கிழக்கை ஒட்டுமொத்தமாகச் சேர்த்து பார்க்கின்றபோது, அரசுடன் இணைந்த செயற்படும் அணிகளின் திசையிலும் ஒரு பகுதி மக்கள் கூடியிருக்கின்றார்கள். அதன் ஒரு பிரதிபலிப்பாக அம்பாறையில் இம்முறை ஒரு தமிழ்ப்

# மிகவும் பொறுப்பில்லாமல் செயற்பட்டதனாலே மக்களால் சரவணபவன் தோற்கடிக்கப்பட்டார்!

## சுமந்திரன் பகிரங்கமாகத் தெரிவிப்பு

பிரதிநிதித்துவமும் கிடைக்காமல் போயுள்ளது.

**பின்னடைவு**

மட்டக்களப்பில் நாம் 2 ஆசனங்களாகக் குறைக்கப்பட்டுள்ளோம். வன்னியில் 3 ஆசனங்களாகக் குறைக்கப்பட்டுள்ளோம். எல்லாவற்றையும் விட மோசமாக யாழ்ப்பாணத்தில் 3 ஆசனங்களாகக் குறைக்கப்பட்டுள்ளோம். யாழ்ப்பாணத்தில் வெளியே எங்களைவிட அதிக ஆசனங்களாக 4 உள்ளன.

இந்தப் பின்னடைவு சம்பந்தமாக கட்சிக்குள் சில கலந்துரையாடல்களை நடத்துவோம். அதிலும் முக்கியமாக இலங்கைத் தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரை, கட்சியின் தலைவர், பொதுச்செயலாளர் ஆகியோர் பொதுத்தேர்தலில் தோற்றிருக்கின்றார்கள். ஆகவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் உள்ள பிரதான கட்சியான தமிழரசுக் கட்சியின் தலைமை தோற்றதாக கருதலாம். அவர்கள் ஒருசில வாக்குகளால் தோற்கவில்லை. அவர்கள் மோசமாகத் தோற்றுள்ளார்கள். ஆகவே, அது குறித்தும் கட்சி நடவடிக்கை எடுக்கும்.

**கட்சி அசண்டையீனம்**

இந்த பின்னடைவுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செயற்பாடும் நிச்சயமாக ஒரு காரணமாக அமைந்தது. வெளி அழுத்தங்களுக்கு மேலதிகமாக, கட்சிக்குள் ஒற்றுமையின்மையும், ஒரு சிலரைத் தோற்கடிக்க வேண்டுமென பகிரங்கமாகக் கூறிச் செயற்பட்ட சந்தர்ப்பங்களும் உள்ளன. இது சம்பந்தமாக விமலேஸ்வரி என்ற பெண்ணுக்கு எதிராக மட்டுமே கட்சி நடவடிக்கை எடுத்தது. அதைத்தவிர, பதவியில் இருந்த கட்சி அங்கத்தவர்கள் பலர் கட்சி வேட்பாளர்கள் குறித்து தாக்கிப் பேசியும், எழுதியும் வரப்பட்டது. இது குறித்து நான் கட்சித் தலைமையிடம் பல தடவை கூறியிருக்கின்றேன். ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

சிறிதரன் பலமுறை கட்சித் தலைமையிடம் முறையிட்டார். எழுத்திலும் ஆதாரங்களுடன் கட்சித் தலைவரிடம் தெரிவித்தார். அவர்கள் எவருக்கு எதிராகவும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

ஓர் அரசியல் கட்சி தேர்தலைச் சந்தித்தபோது, அந்தக் கட்சிக்குள் இருந்தே, கட்சியின் வேட்பாளர்களுக்கு எதிராகச் செயற்படுவது பாரதூரமான தவறு. அவர்கள் உடனடியாகக் கட்சியை விட்டு நீக்க வேண்டிய பாரதூரமான விடயம். அவர்களைக் கட்சியை விட்டு நீக்காதது கட்சியின் பாரதூரமான பின்னடைவுக்குக் காரணம்.

கட்சிக்குள் உள்ளிருந்து கொண்டு, சொந்தக்கட்சிக்கு எதிராகச் செயற்படுவது பார தூரமானது. இந்த விடயம் கட்சியின் தோல்விக்கு முக்கிய காரணம்.

அவர்கள் யாரைத் தோற்கடிக்க வேண்டுமெனக் குற்றஞ்சாட்டினார்களோ, அவர்கள் வெற்றி பெற்றுள்ளனர். இறுதி நாட்களில் கூட, சிறிதரனையும், சுமந்திரனையும் தோற்கடிக்க வேண்டும் எனத் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. கட்சி பாரிய பின்னடைவைச் சந்தித்துள்ள நிலையில் இதை வெற்றியாகச் சொல்ல முடியாது.

இனிவரும் நாட்களில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் எழுச்சி இளைஞர்களின் கையில் உள்ளது. ஒரு மாற்றம் வேண்டுமென்பதைத் தெட்டத்தெளிவாக மக்கள் கட்சிக்கு அடித்துரைத்துள்ளனர். அதனால் அது நடைபெற வேண்டும். மக்களின் நம்பிக்கையை எங்கள் மீது சுமத்தியுள்ளதன் காரணமாக மக்களால் கொடுக்கப்பட்ட அந்த ஆணையை நாம் சிரம் மேல் கொண்டு, கட்சி மீளெழுச்சியையும் நாங்கள் பொறுப்பேற்று முன்கொண்டு செல்வோம்

விக்கி, கஜனுக்கு அழைப்பு

நாடாளுமன்றத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 10 பேராகவே அமரப் போகின்றது. யாழ்ப்பாணத்தில் இருந்து விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் மற்றும் கஜேந்திரகுமாருடன் இன்னொருவர் நாடாளுமன்றம் வரவுள்ளனர். அவர்கள் எங்களோடு இணைந்து அல்லது நாங்கள் அவர்களோடு இணைந்து செயற்பட வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கின்றேன்.

இந்த நாடாளுமன்றத்தில் எதிர்கொள்ளவுள்ள சவால் என்பது மிக பெரியது. அதை நாம் இணைந்து எதிர்கொள்ள வேண்டும். உங்கள் மீதும் நம்பிக்கை வைத்து மக்கள் வாக்களித்துள்ளனர். உங்களுக்கு மக்கள் கொடுத்த ஜனநாயகத் தீர்ப்பை நாம் ஏற்றுக்கொள்வதைப் போல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு 10 ஆசனங்கள் கொடுத்துள்ள மக்களின் ஜனநாயகத் தீர்ப்பையும் நீங்கள் மதிப்பீர்கள் என நம்புகின்றேன்.

நாங்கள் இணைந்து தமிழ் மக்களுக்கு எதிராக எழுந்துள்ள இந்தப் பாரிய சவாலை முறியடிக்க - சேர்ந்து பயணிக்க எங்களுடைய கதவுகள் திறந்துள்ளன - என்றார்.

**கேள்வி:** - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பின்னடைவுக்குத் தலைமையும் ஒரு காரணமென்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்ற நிலையில் இனிவரும் காலத்தில் தலைமையில் மாற்றம் ஏற்படுத்தப்படுமா?

**பதில்:**- நான் ஏற்கனவே சொன்னதைப் போலவே தமிழரசின் தலைவரும் பொதுச் செயலாளரும் மக்களுடைய தீர்ப்பிலே மோசமாகத் தோற்றிருக்கின்றார்கள். ஆகவே அதனை நாங்கள் கருத்திலே எடுத்து உரிய நடவடிக்கை எடுப்போம்.

**கேள்வி:**- கட்சியின் தேசியப்பட்டியல் யாருக்கு எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதா?

**பதில்:**- அது கட்சி விவகாரம். அதைப்பற்றி நாங்கள் இன்னனும் பேசவில்லை. மிக வரைவில் அது குறித்து பேசுவோம். அதன்பின்னர் அந்த முடிவு தொடர்பில் அறிவிப்போம்.

**கேள்வி:**- அமைச்சுப் பதவி பெறுவதற்குச் சாத்தியம் உள்ளதா?

**பதில்:**- இந்த அரசு மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றிருக்கின்ற நிலையில் வேறொரு தரப்புடன் கூடடுச் சேர வேண்டிய தேவை அவர்களுக்குக் கிடையாது. ஆகையினால் அந்தக் கேள்வியே எழாது என்றுதான் நான் நினைக்கின்றேன்.

**கேள்வி:**- தேர்தல் வாக்கெண்ணும் நிலையத்தில் குழப்பம் நிலவிய நிலையில் அங்கு இடம்பெற்ற சூழ்ச்சியால்தான் நீங்கள் தெரிவு செய்யப்பட்டீர்கள் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளதே?

**பதில்:**- இது விசித்தரமான குற்றச்சாட்டு. தேர்தல் முறைகள் பற்றி ஊடகவியலாளர்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கும். ஆக ஒவ்வொரு பிரதேசத்தைச் சேர்ந்த வாக்குகள் ஒவ்வொரு இடத்திலே எண்ணப்படும். அந்த முடிவுகள் ஒவ்வொன்றும் வருகின்ற போது ஒவ்வொரு கட்சியினாலே நியமிக்கப்பட்ட வாக்கெடுப்பு முகவர்கள்தான் ஒவ்வொரு இடத்திலும் கணக்கெடுப்பு ,சரியாக நிகழ்ந்ததா என்று பார்த்து தங்களுடைய இணக்கத்தைக் கொடுப்பார்கள்.

அது கொடுக்கப்பட்ட பின்னர் அங்கே அதுதான் கொடுக்கப்பட்ட வாக்காக அமையும். அப்படி அங்கு வருகின்ற எல்லா வாக்குகளையும் கூட்டித்தான் இறுதியிலே எவருக்கு எவ்வளவு வாக்கு என்று தீர்மானிக்கப்படும். ஒவ்வொரு இடத்திலும் இருந்து முடிவுகள் வருகின்றபோது ஒரே நேரத்தில் அது வருவதில்லை. அது ஒவ்வொரு நேரத்திலே வரும்.

அவ்வாறு வருகின்றபோது ஒவ்வொரு வேட்பாளருக்குமான தொகையைக் கூட்டுகின்றபோது சில வேளைகளிலே உதாரணத்துக்கு வேட்பாளர் ஒருவர் முன்னிலையில் நிற்பார். வேட்பாளர் இரண்டு, மூன்றாம் இடத்தில் இருப்பார். இன்னொரு முடிவுகள் வருகின் பொது அந்த முடிவுகள் மாறி வேட்பாளர்கள் முன்னுக்கும் பின்னுக்கும் போவார்கள் வருவார்கள். அது மாறி மாறி நடக்கிற விடயம்.

ஆகையினாலே கணக்கு எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிற போது இவர் முன்னிலையில், அவர் முன்னிலையில் என்று சொல்லுவது மிக மிகத் தவறான ஒரு செயல். ஏனென்றால் எந்த இடத்தில் இருந்து முடிவு வருகின்றதென்பதைப் பொறுத்துத்தான் அதில் முன்னிலை என்பதைச் சொல்லுவார்கள். சில வேளைகளில் ஒரு குறித்த இடத்தில் இருந்து கடைசியாக ஒரு முடிவு வந்தால் அந்த முடிவு முன்னர் இருந்த முடிவிலிருந்து வேறுபட்டதாக இருக்கும்.

சென்ற தேர்தலிலே அனைவருக்கும் ஒரு விடயம் ஞாபகமிருக்கும். இப்படியாகத்தான் கூட்டமைப்பின் ஐந்தாவது ஆசனத்துக்கு அருந்தவபாலன்தான் தெரிவாகி விட்டார் என்ற செய்தி இருந்தது. அதுவும் முடிவு வருவதற்கு முன்னதாக வந்த செய்தி. ஆனால், இறுதியிலே வந்த கடைசி வாக்கெடுப்பு நிலையத்திலிருந்த வந்த வாக்குகளினாலே சரவணபவன் அருந்தவபாலனை விட சில நூறு வாக்குகளைக் கூடுதலாகப் பெற்றார். ஆகையினால் சரவணபவன்தான் வெற்றி பெற்றார் என்று அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து சரவணபவன்; தன்னுடைய ஆசனத்தைத் திருடி விட்டார் என்று ஒரு பாரிய குற்றச்சாட்டை அருந்தவபாலன் சுமத்தியது எல்லோருக்கும் ஞாபகம் இருக்கலாம். அந்தக் குற்றச்சாட்டு வெறுமனே வாயளவில் சொல்லப்பட்டது மட்டுமல்ல கட்டுரைகளாக எழுதப்பட்டன. ஆங்கிலப் பத்திரிகையொன்றிலே முழுப் பக்கமாக கட்டுரை பிரசுரிக்கப்பட்டது.

இந்த ஐந்து வருட காலமும் அதையே அருந்தவபாலன் சொல்லிக் கொண்டிருந்தார். அதாவது கடந்த 2010 ஆம் ஆண்டு தான் முன்னிலையிலே நின்றார் எனவும், கடைசி நேரத்தில் சிறிதரன் தன்னைப் பின்னாலே தள்ளிவிட்டு சிறிதரன் உள்ளே வந்தார் எனவும் கூறினார். 2015 ஆம் ஆண்டும் தான் முன்னிலையில் இருந்தார் எனவும், சரவணபவன் இறுதி நேரத்தில் தன்னைக் கீழே தள்ளிவிட்டு உள்ளே நுழைந்தார் எனவும் ஒரு குற்றச்சாட்டை தொடர்ச்சியாக அருந்தவபாலன் சொல்லிக் கொண்டே இருந்திருக்கின்றார்.

இவ்வாறானநிலைமையில் இந்தத்தடவைஎன்னசொல்லுவாரோதெரியவில்லை. ஏனெனில் இந்த முறையும் அவர் இரண்டாமிடத்தைப் பெற்றிருக்கின்றார். ஆக இம் முறை விக்கினேஸ்வரன் தன்னைப் பின்னாலே தள்ளிவிட்டு தன்னுடைய ஆசனத்தைத் திருடி விட்டார் என்று அருந்தவபாலன் சொல்லக் கூடும். ஏனெனில் அவருக்கு அதுவொரு பழக்க தோசம்.

ஆனால், நான் என்ன சொல்ல வருகின்றேன் என்றால் இது வழமையாக நடைபெறுகின்றது. அது ஏன் என்றால் இறுதி முடிவுகள் வருவதற்குள் அவசரப்பட்டு இவர் முன்னிலை, அவர் முன்னிலை என சில முடிவுகளை வெளியிடுவதுதான் காரணமாக அமைகின்றது.

வாக்கு கணக்கு எடுக்கின்ற இடத்திற்கு நான் போகவே இல்லை. நான் என்றைக்கும் அப்படிப் போனதும் கிடையாது. நான் இரண்டே இரண்டு தடவைதான் வேட்பாளராக இருந்தாலும் அந்தக் காலங்களில் போனது கிடையாது. ஆனால், எங்களுடைய முகவர்கள் அங்கே இருந்தார்கள். அவர்கள் சொல்லுகின்ற செய்திகளின்படி தொடர்ச்சியாக எனக்கு வந்து கொண்டிருந்த செய்தி நான் இரண்டாம் இடத்தில் இருப்பதாகத்தான். எல்லா இடத்தில் இருந்து வந்த முடிவுகளைப் பார்த்தால் அது உறுதி செய்யப்படும்.

ஏனென்றால் எல்லா இடங்களிலும் நான் முதலாவதும் இரண்டாவதும் இடத்திலே தான் இருந்திருக்கிறேன். ஒவ்வொரு தொகுதியையும் எடுத்துப் பார்த்தால் அது தெரியும். ஆனால், அவ்வாறு இரண்டாம் இடத்தில் நான் தொடர்ச்சியாக இருந்தாலும் அது மாறலாம். சிலர் நான் தோற்றுவிட்டதாகக் கூடச் சொன்னார்கள்.

ஆனால், நான் கூறியது நான் தோற்றால் தோற்கட்டும். அதில் என்ன என்று நான் கூறியிருந்தேன். ஆனால் இறுதி முடிவு வரும் வரையில் ஒன்றும் சொல்ல முடியாது என்று கூறியிருந்தேன். அப்படி சொல்கின்றபோது நேரலையில் நான் பார்க்கின்ற போது ஒரு தடவை சித்தார்த்தன் மத்திய கல்லூரிக்கு வந்தததையும். அவர் தோற்றுவிட்டதாக அவருக்குச் சொல்லப்பட்டதையும் அவர் சார்பாக பெரிய தொரு ஆர்ப்பாட்டம் நிகழ்ந்ததையும் சுமந்திரன் அவருடைய ஆசனத்தைத் திருடி விட்டார் என்றும் கோசங்கள் எழுப்பப்பட்டதையும் நான் பார்த்தேன்.

(10ஆம் பக்கம் பார்க்க)

காலைக்கதிர் Kalaikkathir



# நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த அரசுடன் சேர்ந்து பயணிக்க தயார்

## திருமலையில் சம்பந்தன் அறிவிப்பு

திருமலை, ஓக. 07

நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த அரசுடன் சேர்ந்து பயணிக்கத் தயார்எனதமிழ்தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

நடந்து முடிந்த 2020ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் 9 ஆசனங்களை தமிழ் தேசியக் கூட்டமைப்பு பெற்று வெற்றி ஈட்டியதைத் தொடர்ந்து இன்று வெள்ளிக்கிழமை திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்தில் இரா.சம்பந்தன் தலைமையில் விசேட பூசை இடம்பெற்றது. இந்த வழிபாட்டில் இலங்கை தமிழரசுக் கட்சி மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து செய்தியாளர் சந்திப்பொன்று அவரது இல்லத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த இரா. சம்பந்தன்,

இம்முறை இடம்பெற்ற தேர்தலை ஒரு ஜனநாயகத் தேர்தலாக நான் கருதவில்லை. மக்களுக்கு பணம் வழங்கி நன்கொடை கொடுத்து மதுபானம் வழங்கி ஆளும் கட்சியினர் ஆசனங்களைப் பெற்று கொண்டுள்ளனர்.

சிறிய சிறிய தமிழ்க் கட்சிகள் போட்டியிட்டு தமிழ் வாக்குகளைப் பிரித்துள்ளன. இதனால் 20 ஆசனங்கள் எதிர்பார்க்கப்பட்ட போதிலும் கூட்டமைப்புக்கு ஒன்பது ஆசனங்களே கிடைத்துள்ளன. இதற்காக உழைத்த அனைவருக்கும் நன்றி. மேலும், நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த நீதியும் மற்றும் கௌரவமான பிரஜையாக வாழ தீர்வு வழங்கப்பட வேண்டும். அதில் நாம் உறுதியாக உள்ளோம். ஆனால், ஆட்சி அமைக்கும் அரசாங்கத்தின் நிலைபாட்டைக் கொண்டு எமது இலட்சியத்தை அடைவோம் - என்றார்

# ரவிராஜ் சிலைக்கு கறுப்புத் துணி போர்த்தி சாவகச்சேரியில் எதிர்ப்பு




யாழ்ப்பாணம், ஒக. 07

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் நடராஜா ரவிராஜின் உருவச் சிலையின் முகப் பகுதி கறுப்பு துணியால் மூடப்பட்டுள்ளது.

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான மாமனிதர் நடராஜா ரவிராஜின் மனைவி சசிகலா கூட்டமைப்பின் சார்பில் யாழ்ப் பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிட்டிருந்தார்.

தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட போது விருப்பு வாக்கு எண்ணிக்கையில் மோசடி செய்யப்பட்டு அவர் திட்டமிட்டு தோற்கடிக்கப்பட்டார் எனச் சமூக வலைத்தளங்களில் குற்றச்சாட்டுகள் எழுந்ததை அடுத்து, சசிகலாவும்தான் திட்டமிட்டு தோற்கடிக்கப்பட்டு உள்ளதாக ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் இன்று காலை சாவகச்சேரியில் அமைக்கப்பட்டுள்ள மாமனி தர் நடராஜா ரவிராஜின் உருவச் சிலையின் முகப்பகுதி கறுப்புத்துணியினால் மூடப்பட்டுள்ளதுடன், கைகள் மற்றும் கால்கள் சிவப்பு மஞ்சள் துணியினால் கட்டப்பட்டுள்ளன.

# திருமலையில் கடற்படை வீரர் திடீரென மயங்கி விழுந்து சாவு

(அப்துல்சலாம் யாசீம்)

யாழ்ப்பாணம், ஒக. 07

திருகோணமலை திஸ்ஸ கடற்படை முகாமில் கடமையாற்றி வந்த கடற்படை வீரரொருவர் மயக்க முற்ற நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டமையை அடுத்து உயி ரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித் தனர்.

தரமுயர்வுக்கான பரீட்சார்த்தப்போட்டி நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை இன்று அவருக்கு மயக்க நிலை ஏற்பட்டதாகவும், அதனையடுத்து கடற்படை வைத்தியசாலையில் அவர் அனுமதிக்கப்பட்டார் எனவும், மேல திக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோது அவர் உயிரிழந்துள்ளார் எனவும் தெரியவரு கின்றது.

இவ்வாறு உயிரிழந்தவர் பூனேவ – ஆணைக்கட்டு பகுதியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான 34 வய துடையவர் எனவும் தெரியவருகின்றது.

இந்தக் கடற்படை வீரரின் சடலம் தற்போது திருகோணமலை பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. மரணம் தொடர்பில் பிரேத பரி சோதனைகள் இடம்பெறவுள்ளன. விசாரணைகளைத் தாங்கள் மேற்கொண்டு வருகின்றனர் எனத் துறை முகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# தமிழரசின் தலைமையே தோல்விக்குக் காரணம்!

## கட்சி மறுசீரமைப்பு அவசியம் என சுமந்திரன் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஒக். 07

மக்களின் ஆணையின்படி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் பொதுச் செயலாளரும் மிக மோசமாகத் தோற்றிருக்கின்றார்கள். அதனை நாங்கள் கருத்திலே எடுத்து உரிய நடவடிக்கை எடுப்போம்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலை மையின் செயற்றிறன் இன்மையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வீழ்ச்சிக்குக் காரணம். உடனடியாகக் கட்சியை மறுசீரமைத்து மக்கள் மயப்படுத்தி, திரும்பவும் மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெறும் கட்சியாக மாற்றுவதற்கான நடவடிக்கையை எடுப்போம் எனவும் அவர் கூறினார்.

யாழ்ப்பாணத்திலுள்ள அவருடைய இல்லத்தில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாரிய பின்னடைவைச் சந்தித்துள்ளது. வடக்கு, கிழக்கில் 20 ஆசனங்களை வழங்கவேண்டுமென நாங்கள் மக்களிடம் கேட்டோம். இப்போது அதில் அரைவாசி எண்ணிக்கைதான் எங்களுக்குக் கிடைத்துள்ளது. அதாவது 10 ஆசனங்கள். இது மிக சொற்பம்.

இது நாங்கள் எதிர்பாராத ஒரு பின்னடைவு. கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் எங்களுக்கு இப்படியான பின்னடைவு இருந்த போதிலும், அந்தத் தேர்தல் முறைமை ரீதியாக – சூழல் வித்தியாசம் காரணமாக அந்தப் பின்ன டைவிலிருந்து மீண்டெழுவோம் என்ற நம்பிக்கையுடன் இந்தத் தேர்தலுக்கு முகம் கொடுத்தோம்.

இந்தத் தேர்தலில் தமிழ் மக்கள் வாக்களித்துள்ள முறை பல கரிசனை களை எழுப்புகின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலே நம்பிக்கை குறைந்துள்ளது என்பதை நாங்கள் ஏற்றுக் கொள்கின்றோம். அந்த மக்கள் தீர்ப்பை நாம் பொறுப்புணர்வுடன் ஏற்றுக் கொள்வதுடன், அந்த நம்பிக்கையை மீளக்கட்டியெழுப்பும் செயற்பாட்டில் உடனடியாக நாங்கள் இறங்குவோம்.

மக்களுடன், அடிமட்ட தொண்டர்களுடனான கலந்துரையாடல்கள், எங்களுக்குள் மேற்கொள்ளும் கலந்துரை யாடல்கள் மூலம் பொதுத்தேர்தல் பின்னடைவுக்கான காரணத்தைக் கண்டறிந்து, உடனடி யாகக் கட்சியை மறுசீரமைத்து மக்கள் மயப்படுத்தி, திரும்பவும் மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெறும் கட்சியாக மாற்றுவதற்கான நடவடிக்கையை எடுப் போம்.

எங்களுக்கு வாக்களிக்காத மக்கள் வழக்கம்போல் இரண்டு பக்கமும் போயிருக்கிறார்கள் என்றால் அது சரியாக அமையாது. கடும் தமிழ்த் தேசியம் பேசுபவர்கள் பக்கமாக சிலர் இருக் கிறார்கள். அவர்களைப் போலித் தமிழ்த் தேசியவாதிகள் என நாங்கள் வர்ணிப்பதுண்டு. ஆனால், அவர்களுக்கும் ஒவ் வொரு ஆசனங்கள் கிடைத்துள்ளன.

ஆனால், வடக்கு, கிழக்கை ஒட்டுமொத்தமாகச் சேர்த்து பார்க்கின்றபோது, அரசுடன் இணைந்த செயற்படும் அணிகளின் திசையிலும் ஒரு பகுதி மக்கள் கூடியிருக்கின்றார்கள். அதன் ஒரு பிரதிபலிப்பாக அம்பாறையில் இம் முறை ஒரு தமிழ் பிரதிநிதித்துவமும் கிடைக்காமல் போயுள்ளது.

மட்டக்களப்பில் நாம் 2 ஆசனங்களாகக் குறைக்கப்பட்டுள்ளோம். வன்னியில் 3 ஆசனங்க ளாகக் குறைக்கப்பட்டுள்ளோம். எல்லாவற்றையும் விட மோசமாக யாழ்ப்பாணத்தில் 3 ஆசனங்களாகக் குறைக்கப்பட்டுள்ளோம். யாழ்ப்பாணத்தில் வெளியே எங்களை விட அதிக ஆசனங்களாக 4 உள்ளன.

இந்தப் பின்னடைவு சம்பந்தமாக கட்சிக்குள் சில கலந்துரையாடல்களை நடத்துவோம். அதிலும் முக்கியமாக இலங்கைத் தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரை, கட்சியின் தலைவர், பொதுச்செயலா ளர் ஆகியோர் பொதுத் தேர்தலில் தோற்றிருக்கின்றார்கள். ஆகவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் உள்ள பிரதான கட்சியான தமிழரசுக் கட்சியின் தலைமை தோற்றதாக கருதலாம். அவர்கள் ஒருசில வாக்குகளால் தோற்கவில்லை. அவர்கள் மோசமா கத் தோற்றுள்ளார்கள். ஆகவே, அது குறித்தும் கட்சி நடவடிக்கை எடுக்கும்.

இந்த பின்னடைவுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செயற்பாடும் நிச்ச யமாக ஒரு காரணமாக அமைந்தது. வெளி அழுத்தங்களுக்கு மேலதிகமாக, கட்சிக்குள் ஒற்றுமையின்மையும், ஒரு சிலரைத் தோற்கடிக்க வேண்டுமென பகிரங்கமாகக் கூறிச் செயற்பட்ட சந் தர்ப்பங்களும் உள்ளன. இது சம்பந்தமாக விமலேஸ்வரி என்ற பெண்ணுக்கு எதிராக மட்டுமே கட்சி நடவடிக்கை எடுத்தது. அதைத்தவிர, பதவியில் இருந்த கட்சி அங்கத்தவர்கள் பலர் கட்சி வேட்பாளர்கள் குறித்து தாக்கிப் பேசியும், எழுதியும் வரப்பட்டது. இது குறித்து நான் கட்சித் தலைமையிடம் பல தடவை கூறியிருக்கின்றேன். ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

சிறிதரன் பலமுறை கட்சித் தலைமையிடம் முறையிட்டார். எழுத்திலும் ஆதாரங்களுடன் கட்சித் தலைவரிடம் தெரிவித்தார். அவர்கள் எவருக்கு எதிராகவும் இதுவரை நடவடிக்கை எடுக்கப் படவில்லை.

ஓர் அரசியல் கட்சி தேர்தலைச் சந்தித்தபோது, அந்தக் கட்சிக்குள் இருந்தே, கட்சியின் வேட்பாளர்களுக்கு எதிராகச் செயற்படுவது பாரதூரமான தவறு. அவர்கள் உடனடியாகக் கட்சியை விட்டு நீக்க வேண்டிய பாரதூரமான விடயம். அவர்களைக் கட்சியை விட்டு நீக்காதது கட்சியின் பாரதூரமான பின்னடைவுக்குக் காரணம்.

கட்சிக்குள் உள்ளிருந்து கொண்டு, சொந்தக்கட்சிக்கு எதிராகச் செயற்படுவது பாரதூரமானது. இந்த விடயம் கட்சியின் தோல்விக்கு முக்கிய காரணம்.

அவர்கள் யாரைத் தோற்கடிக்க வேண்டுமெனக் குற்றஞ்சாட்டினார்களோ, அவர்கள் வெற்றி பெற்றுள்ளனர். இறுதி நாள்களில் கூட, சிறிதரனையும், சுமந்திரனையும் தோற்கடிக்க வேண்டும் எனத் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. கட்சி பாரிய பின்னடைவைச் சந்தித்துள்ள நிலையில் இதை வெற்றியாகச் சொல்ல முடியாது.

இனிவரும் நாட்களில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் எழுச்சி இளைஞர் களின் கையில் உள்ளது. ஒரு மாற்றம் வேண்டுமென்பதைத் தெட்டத்தெளிவாக மக்கள் கட்சிக்கு அடித்துரைத்துள்ளனர். அதனால் அது நடைபெற வேண்டும். மக்களின் நம்பிக்கையை எங்கள் மீது சுமத்தியுள்ளதன் காரணமாக மக்களால் கொடுக்கப்பட்ட அந்த ஆணையை நாம் சிரம் மேல் கொண்டு, கட்சி மீளெழுச்சியையும் நாங்கள் பொறுப்பேற்று முன்கொண்டு செல்வோம் – என்றார்.

# கொழும்பில் வென்றனர் மனோ, மரிக்கார், முஜிபுர்

## ‘மொட்டு’வின் சரத் வீரசேகர முன்னிலை

கொழும்பு மாவட்டத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி 12 ஆசனங்களைக் கைப்பற்றி வெற்றி பெற்றுள்ளது. அதே வேளை, ஐக்கிய மக்கள் சக்தி 06 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்ட தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசனும் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளார்.

கொழும்பு மாவட்டத்தில் விருப்பு வாக்குப் பட்டியலில் மஹிந்த அணியின் சார்பில் விமல் வீரவன்ஸவே முதலிடம் பிடிப்பார். ஆனால், இம்மறை ரியர் அட்மிரல் சரத் வீரசேகர பெற்றுள்ளார்.

கொழும்பு மாவட்ட விருப்பு வாக்குப் விவரம் வருமாறு:-

### ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன


01) சரத் வீரசேகர - 3,28,092


02) விமல் வீரவன்ச - 2,67,084


03) உதய பிரபாத் கம்மன்பில - 1,36,331


04) விஜேதாஸ ராஜபக்ஷ - 1,20,626


05) பந்துல குணவர்தன - 1,01,644


06) பிரதீப் சமன் குமார - 91,958


07) தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்தன - 85,287


11) சுசில் பிரேமஜயந்த - 50,321

08) மதுர விதானகெ - 70,205
09) பிரேமனாத் சீ தொலவத்த - 69,055
10) காமினி குலவங்ச லொகுகே - 62,543
12) ஜகத் குமார - 47,693

### ஐக்கிய மக்கள் சக்தி


01) சஜித் பிரேமதாஸ - 3,05,744


02) எஸ்.எம் மரிக்கார் - 96,916


03) முஜிபுர் ரஹ்மான் - 87,589


04) ஹர் டி சில்வா - 82,845


05) சம்பிக்க ரணவக்க - 65,574


06) மனோ கணேசன் - 62,091

### தேசிய மக்கள் சக்தி

01) அநுரகுமார திஸாநாயக்க - 49,814



# பதுளை மாவட்டத்தில் இரு தமிழர்கள் வெற்றி

## செந்தில் தொண்டமான் தோல்வி


வடிவேல் சுரேஷ் - (49,762),


அ.அரவிந்குமார் - (45,491)

பதுளை மாவட்டத்தில் கடந்த முறை மாதிரி இம் முறையும் இரு தமிழர்கள் நாடாளுமன்றத்துக்குத் தெரி வாகியுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான வடிவேல் சுரேஷ் (49,762), அ.அரவிந்குமார் (45,491) ஆகியோரே வெற்றி பெற்றுள்ளனர்.

இதேவேளை, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி சார்பில் முதன்முதலாகப் போட்டியிட்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவர் செந்தில் தொண்டமான் தோல்வியடைந்துள்ளார்.

# மட்டக்களப்பில் பிள்ளையான் விருப்பு வாக்குகளில் முதலிடம்


சிவநேசத்துரை சந்திரகாந்தன் - 54,198


இரா.சாணக்கியன் - 33,332


கோவிந்தன் கருணாகரம் - 26, 382


ச.வியாழேந்திரன் - 22, 218


நஸீர் அஹமட் -17,599

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி சார்பில் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ள சிவநேசத்துரை சந்திரகாந்தன் 54 ஆயிரத்து 198 விருப்பு வாக்குகளைப் பெற்று முதலிடத்தில் உள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் தெரிவான இரா.சாணக்கியன் 33 ஆயிரத்து 332 வாக்குகளைப் பெற்று இரண்டாம் இடத்தில் உள்ளார்.

கூட்டமைப்பின் சார்பில் தெரிவான மற்றைய உறுப்பினரான கோவிந்தன் கருணாகரம் 26 ஆயிரத்து 382 வாக்குகளைப் பெற்று மூன்றாம் இடத்தில் உள்ளார்.

அதேவேளை, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி சார்பில் ச.வியாழேந்திரன் 22 ஆயிரத்து 218 வாக்குகளுடன் நான்காம் இடத்தையும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் நஸீர் அஹமட் 17 ஆயிரத்து 599 வாக்குகளுடன் ஐந்தாம் இடத்தையும் பெற்று நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.

## தோல்வியடைந்தவர்கள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஞா.ஸ்ரீநேசன் (25,303), சீ.யோகேஸ்வரன் (13,626) மற்றும் கி.துரைராஜசிங்கம் (9,650) ஆகியோர் தோல்வியடைந்துள்ளனர்.


தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி சார்பில் போட்டியிட்ட கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பூபாலபிள்ளை பிரசாந்தன் (15,554) மற்றும் சட்டத்தரணி ம.மங்களேஸ்வரி (15,202) ஆகியோரும் தோல்வியடைந்துள்ளனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அலிஸாஹிர் மௌலானாவும் 10 ஆயிரத்து 343 விருப்பு வாக்குகள் மட்டும் பெற்று இம்முறை படுதோல்வியடைந்துள்ளார்.

# நுவரெலியா மாவட்டத்தில் ஐந்து தமிழர்கள் வெற்றி

## ஜீவன் தொண்டமானுக்கு 1,09,155 விருப்பு வாக்குகள்











நுவரெலியா மாவட்டத்தில் 5 தமிழர்கள் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.

ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணி சார்பில் போட்டியிட்ட ஜீவன் தொண்டமான், மரு தபாண்டி ரமேஸ்வரன் ஆகி யோரும், ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்ட பழனிதிகாம்பரம், வேலுசாமி இரா தாகிருஷ்ணன், மயில் வாகனம்உதயகுமார்ஆகியோரும் வெற்றி பெற்றுபெற்றுள்ளனர்.

இதில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் முன்னாள் தலைவர் அமரர் ஆறுமுகம் தொண்டமானின் புதல்வனான ஜீவன் தொண்டமான் ஒரு இலட்சத்து 9 ஆயிரத்து 155 விருப்பு வாக்குகளைப் பெற்று நுவரெலியா மாவட்டத்தில் முதலிடத்தில் உள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# மிகவும் பொறுப்பில்லாமல் .......

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

சித்தார்த்தன் அங்கே உள்ளே சென்று யாழ். தெரிவத்தாட்சி அலுவலர் மசேகனுடைய மேசைக்கு அருகில் அமர்ந்திருந்து அவருடன் உரையாடுவதை நேரலையில் வீட்டிலிருந்தே பார்த்தேன். அங்கு உரையாடிவிட்டு அவர் வெளியே வந்தார். இவ்வாறான நேரத்தில்தான் என்னுடைய முகவர்கள் எனக்கு அறிவித்தது என்னவெனில் எல்லாம் எண்ணி முடிவடைந்து விட்டது. இப்போது ஒன்று சேரத்துவிட்டார்கள். இனி கையெழுத்துப் போட்டு அந்தக் படிவங்கைள அறிவிப்பதுதான் அடுத்ததாகச் செய்யப்பட வேண்டிய விடயம் என்று சொன்னார்கள்.

அவ்வாறு அறிவிக்கின்ற நேரம் வந்த காரணத்தால்தான் நான் அங்கே போனேன். ஏனென்றால் சென்ற தடவையும் அதே இடத்தில் அதே அறையிலேதான் நாங்கள் வேட்பாளர்கள் அனைவரும் உள்ளே போய் வரிசையில் முன்னாலே அமர்ந்திருக்கின்றபோது அப்போதைய தெரிவத்தாட்சி அலுவலராக இருந்த வேதநாயகம் முடிவுகளை எங்களுக்கு நேரடியாக அறிவித்தார். அந்த ஞாபகம் எனக்கு இருந்தது.

அதற்கமைய நான் உள்ளே சென்று முடிவுகள் அறிவிக்கும் வரை காத்துக் கொண்டிருந்தேன். அந்த வேளையில் இன்னொரு வேட்பாளரான திருமதி சசிகலா ரவிராஜ்கூட உள்ளே வந்து அரச அதிபரோடு உரையாடிவிட்டுச் சென்றார். ஆகவே, வேட்பாளர்கள் அரச அதிபரோடு உரையாடிச் சென்றிருக்கிறார்கள். ஆனால், நான் அரச அதிபரோடு உரையாடக்கூடவில்லை. நான் அங்குள்ள கதிரையொன்றில் அமர்ந்து அறிவிப்பு எப்போது வரும் என்று பார்த்துக் கொண்டிருந்தேன்.

ஆனாலும் அறிவிப்பு தாமதமாகிக் கொண்டிருந்தது. அதற்கு எனக்குக் காரணம் தெரியாது. அந்த வேளையிலே வெளியிலே பெரியதொரு ஆர்ப்பாட்டம் நடந்தது. என்னுடைய பெயரைச் சொல்லி பலர் உள்ளே நுழைய முயன்றார்கள். வலுக் கட்டாயமாக கதவைத் தகர்த்துக் கொண்டு உள்ளே நுழைவதற்கு முயற்சித்ததை நான் பார்த்திருந்தேன்.

இதன் போது அங்கு கடமையில் இருந்த பொலிஸார் அவர்களை விரட்டியடிப்பதையும் நான் பார்த்தேன். அது கட்டாயம் செய்யப்பட்டிருக்க வேண்டிய விடயம். ஏனென்றால் தேர்தல் முடிவுகள் எல்லாம் அந்த அறையில் இருக்கின்றது. அவர்கள் அத்துமீறி உள்ளே வந்து அவற்றையெல்லாம் எடுத்துவிட்டால் இந்தத் தேர்தலே இல்லாமல் போயிருக்கும்.

ஆகையினாலே பொலிஸார் தங்களுடைய கடமைகளைச் செய்தார்கள் என்றுதான் நான் நம்புகின்றேன். அவர்கள் துரத்தப்பட்டார்கள். அவ்வாறு அவர்கள் துரத்தப்பட்ட உடனேயே வழி வெளியாகியவுடன் நான் நேரமாகியதால் விட்டுவிட்டு வந்து விட்டேன். அவ்வளவு தான் நடந்தது.

ஆனால் விசித்திரம் என்னவென்றால் சித்தார்த்தன் தோற்கப் போகிறார் என்று பலர் நினைத்த போது நான் அவருடைய ஆசனத்தைப் பறித்து விட்டேன் என்று ஒரு வதந்தி ஆர்ப்பாட்டம் அங்கே நடந்தது. பிறகு அவர் மூன்றாவதாக வந்துவிட்டார். அவருக்கும் எனக்கும் இடையே நான்காயிரம் வாக்கு வித்தியாசம்.

ஆனால், நான்காவதாக வந்த திருமதி சசிகலா ரவிராஜ் துரதிஷ்டவசமாக யார் அவருக்குச் சொல்லிக் கொடுத்தார்களோ தெரியவில்லை. அவரும் தன்னுடைய ஆசனத்தை நான் திருடிவிட்டதாகக் கூறினார். ஆனால், சித்தார்த்தன் எடுத்துவிட்டார் என்றாலும் பரவாயில்லை. ஏனெனில் ஒரு சில நூறு வாக்குகள்தான் அவர்களுக்கு வித்தியாசம். ஆனால், உண்மையில் அது கூட நடப்பதற்கு வாய்ப்பில்லை.

ஏனென்றால் ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலையத்திலும் அவர்களுடைய முகவர்கள் கணக்கிட்டுத்தான் அது நடக்கின்றது. ஆனால் அப்படிக் கூட இல்லாமல் நான்காயிரத்துக்கும் மேற்பட்ட வாக்கு வித்தியாசத்தில் இருந்த நான் அவருடைய ஆசனத்தைத் திருடி விட்டதாகச் சொல்லியிருக்கின்றார்.

அவர் முதல் தடவையாக தேர்தலிலே போட்டியிடுகின்ற ஒரு பெண்மணி. அவருடைய செயற்பாடுகளை நான் விமர்சிக்க விரும்பவில்லை. ஆனால், குறைந்தது அவரோடு கூட இருந்தவர்களாவது இது சாத்தியமற்றது என்பதனைத் தெளிவாகச் சொல்லியிருக்க வேண்டும். அதைவிடுத்து அவரை தவறாக வழிநடத்தியிருப்பது மிக மிக வருந்தத்தக்க ஒரு செயல்.

ஆகவே, அவர் மனமுடைந்தது எனக்கு விளங்குகின்றது. அதனால் நானும் கவலைப் படுகிறேன். ஆனால், தேர்தல் வாக்குகள் அப்படியாக சூறையாடப்பட முடியாது. கடைசி வரைக்கும் இரண்டாம் இடத்தில் நான்காயிரம் வாக்குகளைக் கூட எடுத்தவர் நான்னகாம் இடத்திலிருந்து ஆசனத்தைத் திருடியதாக கனவிலயும் எவரும் குற்றஞ்சாட்டவும் முயலமாட்டார்கள். கடைசி இடத்துக்கும் விடுபடுபவருக்கும் இடையில்தான் இந்தக் குற்றச்சாட்டு நடக்கின்றது வளமை. ஆனால், அதுவும் போலியானது.

### தேர்தல் வீழ்ச்சிக்கு சரவணபவனின் பத்திரிகை பிரதான காரணம்

சரவணபவனோடு எனக்கு பல முரண்பாடுகள் இருக்கின்றன. அவருடைய பத்திரிகை எங்களுடைய இந்தத் தேர்தல் வீழ்ச்சிக்குச் பிரதானமான ஒரு காரணம். ஆனாலும்,நான் சொல்கிறேன். சென்ற தேர்தலில் அருந்தவபாலனின் வாக்குகள் சூறையாடப்படவில்லை. சரவணபவன் சரியாகத்தான் வென்றவர். அவர் மீது எனக்கு என்ன விதமான விமர்சனங்கள் இருந்தாலும் அவர் அதனைச் செய்யவில்லை. அவ்வாறு யாரும் செய்யவும் முடியாது. தேர்தலில் அது செய்ய முடியாது.

ஆகையினால் விடயம் விளங்காமல் அல்லது வேண்டுமென்றே தவறாக வழிநடத்தப்பட்டு இப்படியான ஒரு வதந்தி பரவவிடப்பட்டிருக்கின்றது. இது ஒரு பின்னணியில் நடைபெறுகிறதென்பது தெளிவாகத் தெரிகின்றது. ஏனென்றால் சித்தார்த்தான் தோற்கின்றது போல் இருந்தாலும் நான்தான் காரணம். திருமதி ரவிராஜ் தோற்கிறதைப் போல இருந்தாலும் நான்தான் காரணம்.

ஆகவே அதற்குச் சொல்லப்படுகின்ற காரணம் நான் அங்கே கணக்கெடுக்கின்ற நிலையத்துக்குள்ளே போனேன் என்றுதான். ஆனால், நான் அங்கு போகவில்லை. அங்கு அரச அதிபரைச் சந்திக்கின்ற இடத்தில் அவரை மற்றவர்கள் முதலிலே சந்தித்திருக்கின்றார்கள். நான் அறிவிப்பு செய்கின்ற இடத்துக்கு மட்டும்தான் நான் சென்றிருக்கின்றேன்.

ஆனபடியினாலே சொல்லப்படுகின்ற குற்றச்சாட்டுக்கள் கூட விசித்திரமானவை; நகைப்புக்குரியவை. ஆனால், சித்தார்த்தனுக்குன் சசிகலாவுக்கும் இடையே சிறிய விருப்பு வாக்கு வித்தியசாம். ஆகவே சிறிய வாக்கு வித்தியாசத்தில் தோற்றுவிட்ட ஒருவரின் மனமுடைந்த நிலையிலே அவரைக் குறித்து நான் எதுவும் சொல்ல விரும்பவில்லை. அவருக்கு என்னுடைய அனுதாபங்கள்.

தமிழ் மக்களுடைய வாக்குகள் துரதிஷ்டவசமாக அரசோடு சேர்ந்தியங்குபவர்கள் பக்கமாகப் போயிருக்கின்றது. அதைக் குறித்து நாங்கள் கவனமெடுக்க வேண்டும். ஏன் மக்கள் அப்படியாகச் சிந்திக்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். அபிவிருத்தி என்று பலர் சொல்லுகிறார்கள். ஆனால் நான் அதனை அபிவிருத்தி என்று சொல்வதிலும் விட மக்களின் அடிப்படை அத்தியாவசிய தேவைகளையும் நாங்கள் கவனிக்கிற தேவை இருக்கின்றது என்பதை பல தடவைகள் இந்தத் தேர்தலிலே சொல்லியிருக்கிறேன்.

ஆனால் அதைக் கூட திரிவுபடுத்தி சுமந்திரனுக்கு அமைச்சுப் பதவி ஆசை என்று இங்குள்ள பத்திரிகையொன்று முதல் பக்கத்தில் பிரசுரித்திருந்தது.

தமிழ்த் தேசியத்தைக் காக்க சுமந்திரனைத் தோற்கடிப்போம் என்று அந்தப் பத்திரிகை தலையங்கம் கூட எழுதியது. ஒரு சக வேட்பாளருடைய பத்திரிகை அப்படியான மோசமான பிரசாரத்தில் ஈடுபட்டது.

அது தன்னுடைய கட்சியை எவ்வளவாகப் பாதிக்கும் என்று கூட தெரியாதவரைப் போல் பத்து வருடம் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த ஒருவர் மிக மிக பொறுப்பில்லாமல் செயற்பட்டதனாலே அவர் தோற்றார். அவர் கட்டாயம் தோற்கடிக்கப்பட வேண்டியவர். மக்களும் அவருடைய செயற்பாடுகள் தெரிந்து அவரைத் தோற்கடித்தார்கள்.

நான் தமிழ் மக்களுக்கு ஒரு நன்றி சொல்ல வேண்டும். சரவணபவன் இரண்டு தடவைகள் தமிழ்மக்களுக்கு ஆலோசனை சொல்லியிருந்தார். முதலாவதாக சூத்தைக் கத்தரிக்காய் இருந்தால் சூத்தையை வெட்டி விடுங்கோ; ஆனால் கத்தரிக்காயை வைத்திருங்கோ என்று சொல்லியிருந்தார்.

மேலும் குருவிச்சை மரத்தில் வளர்ந்துவிட்டது என்றால் மரத்தை வெட்டி விடாதீர்கள்; குருவிச்சையை மட்டும் வெட்டி விடுங்கள் என்றும் சொல்லியிருந்தார். தமிழ் மக்கள் நன்றாகவே அவருடைய ஆலோசனையைப் பின்பற்றியிருக்கிறார்கள். குருவிச்சை வெட்ப்பட்டிருக்கின்றது. சூத்தையும் வெட்டி எறியப்பட்டிருக்கின்றது - என்றார்.

# யாழ்ப்பாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயர் அதிகாரிகளுக்கு அழுத்தம் பிரயோகிக்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இந்தத் தேர்தல் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலாக நடக்கவில்லை. மாறாக மோசடியும், அரசியல் மற்றும் ஆயுதப் பலத்துடன் பலாத்காரமாக நடத்தப்பட்ட தேர்தலாகவே பார்க்க முடியும் என்றும் அவர் கூறினார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று பிற்பகல் நடந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

நடந்து முடிந்த தேர்தலில் மிக இலட்சக்கணக்கான வாக்காளர்களை கொண்ட பல மாவட்டங்களின் இறுதி முடிவுகள் கூட மிக விரைவாக வெளியிடப்பட்டிருந்தன.

இருப்பினும் 5 இலட்சத்து 71 ஆயிரம் வாக்காளர்களைக் கொண்ட யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்திலே 4 இலட்சத்துக்கு குறைவான வாக்குகள் பதிவு செய்யப்பட்ட நிலையில், பிற்பகல் பொழுதுக்குள் அனைத்து வாக்கெண்ணும் நடவடிக்கைகள் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட கூட முடிவுகளை அறிவிப்பதில் தொடர்ந்தும் கால இழுத்தடிப்பு நடந்துள்ளது.

இது தெரிவத்தாட்சி அலுவலர் உட்பட பலருக்கும், அரசின் உயர் மட்டத்தில் இருந்து ஏதோ ஒரு அழுத்தம் பிரயோகிக்கப்பட்டுக் கொண்டிருந்ததை எங்களால் உணரக்கூடியதாக இருந்தது.

இதற்கு எங்களிடம் பல சாட்சிகள் உள்ளன. அந்த சாட்சிகளைத் தகுந்த நேரத்தில் வெளியிடுவோம்.

விருப்பு வாக்குகள் எண்ணப்பட்டபின்னர் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்ட சிறிதரன், சித்தார்த்தன், சசிகலா போன்றவர்கள் முன்னணியில் இருந்தார்கள்.

இதன் பின்னர் சசிகலா ரவிராஜ் பதவி விலக வேண்டும் அல்லது இராஜினாமா செய்ய வேண்டும் என்று அந்தக் கட்சியினரே அழுத்தங்களை கொடுத்திருந்தார்கள். இதனை ஏற்றுக் கொள்ளாத சசிகலா வாக்கெண்ணும் நிலையத்தில் நின்றே தனது கைத்தொலைபேசியை எறிந்திருந்தைத் தொடர்ந்து அங்கு பிரச்சினைகள் எழுந்தன.

தொடர்ந்தும் தேர்தல் முடிவுகளை அறிவிப்பதில் இழுத்தடிப்பு செய்யப்பட்ட காரணத்தினால், நாங்கள் தேர்தல்கள் திணைக்களத்தின் தலைவரிடம் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்திருந்தோம்.

இந்த முறைப்பாடு தொடர்பிலும் உரிய பதில் வழங்காத நிலையில், இரவு 10 மணியளவில் யாழ்.தெரிவத்தாட்சி அலுவலகர் மகேசனைச் சந்தித்து ஏன் தாமதிக்கின்றீர்கள் என்று கேட்டேன்.

இதன்போது 11 வாக்கெண்ணும் அறைகளில் இருந்து விருப்பு வாக்கு விவரங்கள் கிடைக்கவில்லை. பளை உட்பட 5 நிலையங்களில் சிறு சிறு பிரச்சினைகள் உள்ளன அதனை தீர்த்துவிட்டு ஒரு மணிநேரத்தில் வெளியிடுவேன் .

இருப்பினும் ஏறத்தாழ அதிகாலை 3.30 மணிவரைக்கும் தேர்தல் முடிவுகள் வெளியிடப்படாத சூழ்நிலைதான் இருந்தது.

இதன் பின்னர் மீண்டும் எமது கட்சித் தலைவரும், சட்டத்தரணியுமான சிறிகாந்தாவுடன் சென்று தெரிவத்தாட்சி அலுவலரைச் சந்தித்தோம். இதன் போது ஜனநாயகத்திற்கு எதிரான தவறான முடிவு எடுப்பதை நாங்கள் விரும்பவில்லை மக்களுடைய தீர்ப்பு தேர்தல் முடிவுகளில் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்று கோரியிருந்தோம். அதற்கும் எந்த பதிலோ அல்லது முடிவுகளை வெளியிடும் நோக்கம் அவர்களிடம் இல்லை.

இந்த தேர்தல் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலாக நடக்கவில்லை. மாறாக மோசடியும், அரசியல் மற்றும் ஆயுதப் பலத்துடன் பலாத்காரமாக நடத்தப்பட்ட தேர்தலாகவே பார்க்க முடியும்.

நேற்று விசேட அதிரடிப் படையினர் குவிக்கப்பட்டு, அவர்கள் அங்கு எவ்வாறு நடந்து கொண்டார் என்று அனைவருக்கும் தெரியும்.

யானைவரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே என்பதைப் போல விசேட அதிரடிப்படை அங்கு வந்த பின்னர்தான் தெரிந்தது அங்கு சுமந்திரன் வரப்போகின்றார் என்று.

வாக்கெண்ணும் நிலைமாக செயற்பட்ட யாழ்.மத்திய கல்லூரியில் அமைதியான நிலை இருந்திருக்கவில்லை. தேர்தல் கண்காணிப்பாளர்கள், ஊடகவியலாளர்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது.

சுமந்திரனின் உதவியாளர்கள் என்று சொல்லப்படுபவர்கள் கைகாட்டி மாவை சேனாதிராசாவின் மகன் கலையமுதன் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. சசிகலாவின் புதல்வி, மருமகள் உட்பட குடும்பத்தினர் தாக்கப்பட்டார்கள்.

சுமந்திரன் அரசின் உயர் அதிகாரிகளின் உதவியோடு, விசேட அதிரடிப் படையினர் ஆகாயத்தை நோக்கி துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டு வன்முறையை பயன்படுத்தி சுமந்திரனை மீட்டுச் செல்லும் அளவுக்கு அரச மற்றும் படைபலம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இவை அப்பட்டமான ஜனநாயக மீறல்களாகும். சர்வாதிகார ஆட்சிக்கான முன்னோடிகளே இவை. இந்த அராஜகங்களுக்கு எதிராக சகலரும் கட்சி பேதங்களை மறந்து மிகப்பெரிய அளவில் எதிர்ப்பை அரசுக்கு காண்பிக்க வேண்டும்.

சம்பந்தப்பட்டவர் தானாக இதில் இருந்து விலகும் வரைக்கும் நாங்கள் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

மாமனிதர் ரவிராஜ் சசிகலா விரும்பினால் தேர்தல் ஆட்சேபனை மனுவுக்கான தேவையான அனைத்து சட்ட உதவிகளையும் இலவசமாக செய்து கொடுக்க முடியும்.

எதிர்காலத்திலாவது நீதியானதும், சுதந்திரமானதுமான தேர்தல் நடக்க வேண்டுமாக இருந்தால், நடந்து முடிந்த தேர்தலில் நடந்த முறைகேடுகளுக்கு நீதி வேண்டும். - என்றார்.

# பங்காளிகளையும் சேர்த்து 150 ஆசனங்களுடன் மூன்றிலிரண்டுப் பலத்தை நிரூபித்தது 'மொட்டு'

இலங்கையின் 09ஆவது நாடாளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மையான ஆசனங்களைக் கைப்பற்றி அமோக வெற்றி பெற்ற ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணி, பங்காளிக் கட்சிகளின் ஆதரவைப் பெற்று மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சியமைக்கவுள்ளது.

நாடு முழுவதும் 68 இலட்சத்து 53 ஆயிரத்து 693 வாக்குகளுடன் அதிகளவான தொகுதிகளைக் கைப்பற்றிய ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி 145 ஆசனங்களைப் பெற்றுக்கொண்டது.

ஐக்கிய மக்கள் சக்தி 27 இலட்சத்து 71ஆயிரத்து 984 வாக்குகளுடன் 54 ஆசனங்களைக் கைப்பற்றியது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 3 இலட்சத்து 27 ஆயிரத்து 168 வாக்குகளுடன் 10 ஆசனங்களைப் பெற்றது.

தேசிய மக்கள் சக்தி 4 இலட்சத்து 45 ஆயிரத்து 958 வாக்குகளுடன் 3 ஆசனங்களைக் கைப்பற்றியது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி 67 ஆயிரத்து 766 வாக்குகளுடன் 2 ஆசனங்களைப் பெற்றது.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி 61 ஆயிரத்து 464 வாக்குகளுடன் 2 ஆசனங்களைக் கைப்பற்றியது.

ஐக்கிய தேசியக் கட்சி 2 இலட்சத்து 49 ஆயிரத்து 435 வாக்குகளுடன் ஓர் ஆசனத்தைப் பெற்றது.

'எங்கள் மக்கள் சக்தி' 67 ஆயிரத்து 758 வாக்குகளுடன் ஓர் ஆசனத்தைக் கைப்பற்றியது.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி 67 ஆயிரத்து 692 வாக்குகளுடன் ஓர் ஆசனத்தைப் பெற்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 66 ஆயிரத்து 579 வாக்குகளுடன் ஓர் ஆசனத்தைக் கைப்பற்றியது.

முஸ்லிம் தேசியக் கூட்டணி 55 ஆயிரத்து 981 வாக்குகளுடன் ஓர் ஆசனத்தைப் பெற்றது.

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி 51 ஆயிரத்து 301 வாக்குகளுடன் ஓர் ஆசனத்தைக் கைப்பற்றியது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் 43 ஆயிரத்து 319 வாக்குகளுடன் ஓர் ஆசனத்தைப் பெற்றது.

தேசிய காங்கிரஸ் 39 ஆயிரத்து 272 வாக்குகளுடன் ஓர் ஆசனத்தைக் கைப்பற்றியது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 34 ஆயிரத்து 428 வாக்குகளுடன் ஓர் ஆசனத்தைப் பெற்றது.

இந்தநிலையில், 145 ஆசனங்களைப் பெற்றுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தனது பங்காளிக் கட்சிகளான ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (2 ஆசனங்கள்), தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி (ஓர் ஆசனம்), தேசிய காங்கிரஸ் (ஓர் ஆசனம்) மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (ஓர் ஆசனம்) என்பவற்றின் ஆதரவைப் பெற்று (மொத்தம் 150 ஆசனங்கள்) இலகுவாக மூன்றிலிரண்டுப் பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சியமைக்கவுள்ளது.

# சசிகலாவுக்கு உறுதுணையாக நிற்பார் சு.கவின் பவதாரரிணி

## அவரே நேற்றுத் தகவல்



(கலையமுதன்)

யாழ்ப்பாணம்,ஓக.08

சசிகலா ரவிராஜ் சட்டரீதியாக நடவடிக்கை எடுத்தால் அவருக்கு உறுதுணையாக நாங்கள் நிற்போமெனவும் சட்ட உதவிக்கு எம்மாலான ஒத்துழைப்பை வழங்குவோமெனவும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் யாழ் மாவட்ட வேட்பாளர் பவதாரணி ராஜசிங்கம் தெரிவித்தார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று முற்பகல் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே பவதாரணி ராஜசிங்கம் இதனை தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் கட்சி,அரசியல் பேதங்களை கடந்து பெண்ணாக நாங்கள் அனைவரும் ஒன்றுபட்டவர்கள். அவளுக்கு ஓர் அநீதி எழும்போது அதற்கு எதிராகக் குரல் கொடுப்பேன் என உறுதியாய் முடிவெடுத்தவர்கள்.

சசிகலா ரவிராஜுக்கு எதிராக அநீதி இழைக்கப்படுமானால் நியாயம் கிடைக்கும் வரையில் அவருடன் கட்சிபேதமின்றி பெண்ணாக நான் முன்னிற்பேன். கட்சிகளை கடந்து பெண் வேட்பாளர்கள் இணைந்து பயணிக்க வேண்டும் என மற்றவர்களிடமும் கேட்டுக் கொள்கின்றேன்.

பெண்களைப் பகடைக்காயாகப் பாவிக்க வேண்டாம். தாய் மகளோடு கதறியமையைப் பார்த்தோம். இதனை ஏற்று கொள்ள முடியாது.

விருப்பு வாக்கு அறிவிப்பு விடயத்தில் தவறில்லை என்றால் சிக்கல் இல்லை. ஆனால் மோசடி இடம்பெற்றிருந்தால் அவருக்குரிய நியாயம் கிடைக்க வேண்டும். இது தொடர்பில் சசிகலா ரவிராஜ் சட்டரீதியாக நடவடிக்கை எடுத்தால் அவருக்கு உறுதுணையாக நாங்கள் நிற்போம். சட்ட உதவிக்கு எம் மாலான ஒத்துழைப்பை வழங்குவோம்.

தேர்தலுக்கு பின்னர் நீங்கள் வருவீர்களா எனக்கேட்டார்கள். நான் இன்று இங்கு வந்துள்ளேன். எமது கட்சிக்கு ஒரு ஆசனம் யாழ்ப்பாணத்தில் கிடைத்துள்ளது. அதனை வைத்து நாம் சொன்ன வேலைத்திட்டங்கள் அனைத்தையும் செய்வோம்.

என் மீது நம்பிக்கை வைத்து எனக்கு வாக்களித்த அனைவருக்கும் என்னால் முடிந்த அளவு அனைத்தையும் செய்து கொடுப்பேன்.- என்றும் தெரிவித்தார்.

# மனித உரிமைகள், சட்டத்தின் ஆட்சியை புதிய அரசு பேணும் என அமெ.நம்பிக்கை

மனித உரிமைகள் மற்றும் சட்டத்தின் ஆட்சியைக் கட்டியெழுப்ப புதிய அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படும் என, எதிர்பார்ப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று சவாலுக்கு மத்தியில் மிகவும் அமைதியான முறையில் தேர்தலை நடத்தி முடித்தமைக்கு இலங்கைக்கு அமெரிக்கா வாழ்த்து தெரிவித்துள்ளது

புதிய நாடாளுமன்றம் கூடுவதுடன், அனைத்துதரப்பினரையும்இணைத்துக் கொண்டு செயல்திறன் மிக்க பொருளாதாரத்தை கட்டியெழுப்பவும், மனித உரிமைகள் மற்றும் சட்டத்தின் ஆட்சியைக்கட்டியெழுப்பவும், நாட்டின் இறையாண்மையைக் காக்கவும் புதிய அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படும் என, எதிர்பார்ப்பதாக கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




**வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசாமி கோவில் வருடாந்த உற்சவத்தையொட்டி 'காலைக்கதிர்' நடாத்தும் பாடசாலை மாணவர்களுக்கான**

# மாபெரும் சைவ சமய அறிவுப் போட்டி - 2020

## போட்டி விதிகள்

1. இந்தப் போட்டி பாடசாலை மாணவர்களுக்கானதாகும். தரம் 6 முதல் தரம் 13 வரையான மாணவர்கள் மட்டுமே இந்தப் போட்டியில் பங்கு பற்ற முடியும்.
2. 03.08.2020 முதல் எதிர்வரும் 18.08.2020 வரை காலைக்கதிரில் தினமும் வெளியாகும் கேள்விகளுக்குச் சரியான விடைகளை இதே தாளில் எழுதி, கூப்பனிலுள்ள விபரங்களை நிரப்பி அனுப்புவதன் மூலம் போட்டியினுள் நுழையலாம்.
3. சரியான விடைகளை எழுதும் மாணவர்களில் இருந்து தினமும் குலுக்கல் முறை மூலம் அந்த நாளுக்குரிய வெற்றியாளர் தெரிவு செய்யப்படுவார். அத்துடன் முழு நாள்களிலும் சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று பேருக்கும் பணப் பரிசில்கள் உண்டு

**பரிசு விபரம் :**

**முழுப் போட்டிக்குமான முதலாம் இடம் - ரூபா 15,000.00**
**இரண்டாம் இடம் - ரூபா 10,000.00**
**மூன்றாம் இடம் - ரூபா 5,000.00**
**தினசரி வெற்றியாளர்கள் ஒவ்வொருவருக்கும் தலா - ரூபா 1,000.00**

4. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் அனுப்பலாம்.
5. பரிசுக்குரியவர்கள் எதிர்வரும் 22.08.2020 அன்று காலைக்கதிர் பத்திரிகை மூலம் அறிவிக்கப்படுவார்கள்.
6. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதாகும்.

**1. அபிடேகக் கந்தன் எனப் போற்றப்படும் ஈழத்து முருகன் ஆலயம் எது?**

..........................................................................................

**2. இலங்கையிலேயே மிக உயரமான ஆலயக் கோபுரங்களில் ஒன்றாகிய நல்லூர்க் கந்தசாமி கோவிலின் வடக்கு வாயிலில் அமைக்கப்பட்ட குபேர வாயில் - நவ தள இராஜ கோபுரத்தின் கும்பாபிஷேகம் எந்த ஆண்டு இடம்பெற்றது?**

..........................................................................................

**3. திருச்செந்தூரில் சூரனை வதம் செய்வதற்கு முன்னர், முருகப் பெருமான் பார்வதியை வணங்கி வேல் பெற்றுப் போருக்குச் சென்ற திருத்தலம் எது? (இத் தலம் முருகனின் அறிவிக்கப் படாத ஏழாவது படைவீடாகப் போற்றப்படுவதாகும்)**

..........................................................................................

**4. உருவாய் அருவாய் உளதாய் இலதாய் மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்........ என்ற பாடல் அடங்கிய நூல் எது?**

..........................................................................................

**5. செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தின் தல விருட்சம் எது?**

..........................................................................................

**சரியான பதில்கள், கூப்பன்களுடன் இணைக்கப்பட்டு தபால் மூலமாகவோ, நேரடியாகவோ கிடைக்கக் கூடியவாறு எதிர்வரும் 20.08.2020 இற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.**

**காலைக்கதிர் - பசுமை ஊடக இல்லம்**
**30, கல்லூரி வீதி,**
**யாழ்ப்பாணம்**

06

பங்குபற்றுபவர்களின் விவரங்கள்:-

1. முழுப் பெயர் :..........................................................
2. பிறந்த திகதி :..........................................................
3. கல்வி கற்கும் தரம் :..................................................
4. பாடசாலை :..............................................................

..............................................
கையொப்பம்

காலைக்கதிர் Kalaikkathir

# 191 பயணிகளுடன் வந்த ‘ஏர் இந்தியா’ விமானம் கோழிக்கோடில் தரையிறங்கிய சமயம் விபத்து

## 19 பேர் சாவு; 120 பேர் காயம்; 15 பேரின் நிலை கவலைக்கிடம்







உயிரிழந்த விமானி
விங் கொமாண்டர் டிபக் வசந்த்

கோழிக்கோடு, ஒக. 08

துபாயிலிருந்து 191 பேருடன் வந்த ’ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ்’ விமானம், கோழிக்கோடில் தரையிறங்கிய போது விபத்துக்குள்ளானது. இதில் விமானி, குழந்தை உள்ளிட்ட 19 பேர் பலியாகினர் எனத் தகவல்கள் வெளியாகி உள்ளன. 120 பேர் காயமடைந்துள்ளதாகவும் 15 பேர் கவலைக்கிடமான நிலையில் உள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுவரை 170 பேர் மீட்கப்பட்டுள்ளனர் எனத் தேசிய பேரிடர் மீட்பு குழு தெரிவித்துள்ளது.

கொரோனா ஊரடங்கால், வெளிநாட்டில் சிக்கி தவிக்கும் இந்தியர்களை, வந்தே பாரத் திட்டத்தின் மூலம், இந்தியா அழைத்து வரும் பணியை மத்திய அரசு செய்து வருகிறது. இந்நிலையில், துபாயில் சிக்கி தவித்த இந்தியர்கள் 191 பேர், வந்தே பாரத் திட்டத்தின் கீழ் ‘ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ்’ விமானம் கேரள மாநிலம் கோழிக் கோடு வந்தது.

இந்த விமானம் கோழிக்கோடு கரிப்பூர் விமான நிலையத்தில், தரையிறங்கும் போது விபத்துக்குள்ளானது. ஓடுதளம் அருகே வந்த போது, 35 அடி உயரத்தில் இருந்து விழுந்து விபத்துக்குள்ளானதில் விமானம் இரண்டாக உடைந்ததாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

மேலும், இந்த விபத்தில் விமானி, குழந்தை உள்ளிட்ட 16 பேர் பலியாகி உள்ளனர் என மலப்புரம் எஸ்.பி தெரிவித்துள்ளார். தீயணைப்புத் துறையினர், காயமடைந்த பயணிகளை மீட்டு ஆம்புலன்ஸ் மூலம் அருகிலுள்ள மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

கடும் மழை காரணமாக விபத்து நடந்துள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. விமானத்தின் முன் சக்கரத்தில் பழுது ஏற்பட்டதாகவும், இதனால், ஓடுதளத்திலிருந்து விலகி விபத்துக்குள்ளானதாகவும் முதற்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

# தமிழ் பிரதிநிதித்துவத்தை இழந்துள்ளது அம்பாறை

அம்பாறை, ஒக 08

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் 4 முஸ்லிம்களும், 3 சிங்களவர்களும் தெரிவாகியுள்ளனர். அங்கு தமிழ் பிரதிநிதித்துவம் இம்முறை கிடைக்கவில்லை.

ஶ்ரீலங்கா பொதுஜன முன்னணி சார்பில் விமலவீர திஸாநாயக்க (63,594), டீ.சி வீரசிங்க (5,600), திலக் ராஜபக்ஷ (54,203) ஆகியோர் வெற்றி பெற்றுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் எம்.எச்.எம் ஹரீஸ் (36,850), பைஸல் காசீம் (29,423) ஆகியோரும், தேசிய காங்கிரஸ் சார்பில் ஏ.எல்.எம். அதாவுல்லாவும் (35,697) தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் புது முகமான மொஹமட் முஸாரப் (18,389) வெற்றி பெற்றுள்ளார்.

# புதிய பிரதமராக மஹிந்த நாளை பதவியேற்கிறார்



கொழும்பு, ஓக. 08

நாட்டின் புதிய பிரதமராக மஹிந்த ராஜபக்ஷ, நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு களனி ரஜமகா விகாரையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் பதவியேற்கிறார் என்று அறவிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா பொதுஜன பெரமுன 145 ஆசனங்களைப் பெற்று அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சியமைக்கும் தகுதியைப் பெற்ற நிலையில் அதன் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ பிரதமராகப் பதவியேற்கவுள்ளார்.

இதேவேளை, நாடாளுமன்றம் எதிர்வரும் 20ஆம் திகதி கூடவுள்ளது.

# சசிகலாவின் முறைப்பாடு; சம்பந்தனுடன் பேசி முடிவு

## இப்படிக் கூறுகிறார் மாவை



(பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணம்,ஓக.08

சசிகலா விடயம் தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுடன் கலந்தாலோசித்து முடிகளை மேற்கொள்ளுவோம் என மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

நேற்று காலை 6 மணியளவில் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவின் இல்லத்தில் நாடாளுமன்ற வேட்பாளர் சசிகலா ரவிராஜ் சந்திப்பொன்றை மேற்கொண்டார். அதன் பின்னர் மாவை சேனாதிராஜா ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் -

தேர்தல் இறுதி முடிவுகள் அறிவிக்கும் நேரத்தில் நடைபெற்ற சம்பவங்கள் கவலையளிக்கின்றன. சசிகலா ரவிராஜ் கூறுவது போன்ற நிகழ்சிகள் நடைபெற்றிருந்தால் அது கட்சிக்கு அவமானத்தை ஏற்படுத்தக் கூடியவையாகும்.

இது தொடர்பில் என்ன முடிவினை எடுப்பது என்பது தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுடன் கலந்தாலோசித்து தீர்மானிப்போம். தேசியப் பட்டியலில் சசிகலாவை உள்வாங்குவதா, இல்லையா என்பது தொடர்பில் இனி மேல் தான் ஆராய வேண்டும்.

தான் வெற்றிபெற்றுவிட்டதாக அங்கு கடைமையாற்றிய அலுவலகர்களே உத்தியோகப் பற்றற்ற முறையில் தெரிவித்து பாராட்டுக்களை தெரிவித்திருந்த நிலையில் முடிவுகள் நீண்ட இடைவெளியின் பின்னர் வெளியிடப்பட்டன. இதன் மூலம் அநீதி இழைக்கப்பட்டுள்ளது என சசிகலா குற்றச்சாட்டை முன்வைத்தார்.

இவ் விடயம் தொடர்பில் உரியவர்களுடன் கலந்தாலோசித்து இறுதி முடிவிற்கு வருவோம் என்றார்.

# நல்லூரில் இன்று .........









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.08.2020 இல் வெளியிடப்பெற்றது.